# முரசொலி

வார இதழ்

ஆசிரியர்: மு.கருணாநிதி

முரசு 4 | 21–6–57 | வெள்ளி | ஒலி-9


## அது மட்டும் என்னவாம்?




Best copy available

சம்பளக் குறைப்பு!
சிக்கனம்!
ஆடம்பரக் குறைப்பு!
விருந்துகள் தடுப்பு!
—காங்கிரஸ் மேலிடம் புதிய வாணவேடிக்கையைக் கொளுத்திவிட்டு

★★ சிக்கனமாம்; ஆனல் இவர்கள்தான் கட்சி நடத்துகிற கூட்டத்துக்கு லட்சம் ரூபாய்க்கு மேல் அரசாங்கக் கஜானுவிற்குச் செலவு வைத்திருக்கிருர்கள்!

★★ சிக்கனமாம்; அதனுல்தான் ஏறக்குறைய லட்சம் ரூபாய் செலவழித்து 'சிறிய வீடு' கட்டுகிருர்கள்!

# ★ நாடகமாடும் நாடாள்வோர்! ★

மாறன், எம். ஏ.,

மக்களுக்கு வேடிக்கை காட்டுகிறது!

"இனிமேல் நான் பொய் சொல்லுவதில்லை; புளுகுரைப்பதில்லை" என்று ஒருவன் 'பஞ்சாயத்தார் முன்னிலையில் சபதம் எடுத்துக் கொண்டால் அதற்கு என்ன அர்த்தம்?

"இதுவரை நான் பொய் சொல்லித்தான் வாழ்ந்தேன்; புளுகுரைத்துத்தான் காலம் கடத்தினேன் — என்பதை ஊர்ஜிதப் படுத்துகிருன் என்பதுதான்!

"இனிமேல் திருடுவதில்லை"— என்று ஒருவன் நீதிபதியின் முன்னே உறுதிமொழி கூறுகிருனென்ருல்; முச்சலிக்காவிலே கையெழுத்துப் போட்டுத் தருகிருனென்ருல் அதற்கு என்ன பொருள்?

"இதுவரை நான் திருடிக் கொண்டுதான் இருந்தேன். கொள்ளைக்காரனுகத்தான் வாழ்ந்தேன்"—என்பதை அந்தக் கொடியவன் ஒப்புக்கொள்கிருன் என்பதுதான்!

—இப்போது காங்கிரஸ் அமைச்சர்கள் ஆடம்பரங்களைக் குறைத்துக் கொள்கிருேம்; விருந்து விழா வைபவங்களிலே ஈடுபட்டுப் பொது மக்கள் பாடுபட்டுத்தரும் வரிப் பணத்தைப் பாழாக்குவதில்லை—என்று ஊரறிய உலகறிய ஒப்புக் கொண்டால் அதற்கும் இதுமாதிரியான பொருள்தான் இருக்க முடியும்—

இதுவரை காங்கிரஸ் அமைச்சர்கள் ஊதாரித்தனமாக வாழ்ந்திருக்கிருர்கள்; பொறுப்பற்ற முறையில் கஜானுவிலிருந்து வெண் பொற்காசுகளை வெண்மணலென்று நினைத்து வாரியிறைத்திருக்கிருர்கள்; விருந்துகளுக்கும் கேளிக்கைகளுக்கும் மக்கள் வாரி வாரிக் கொடுத்த வரிப் பணத்தை கோரிக்கையற்றுக் கிடப்பதாகக் கருதிக் கொண்டு சேற்றிலே கொட்டிய சந்தனக் குழம்பாக்கி அதை வீணடித்திருக்கிருர்கள்!

—இதைத்தான் அவர்களே ஒப்புக் கொள்கிறார்கள், சிறிதும் வெட்கமின்றி, நாணமின்றி என்னும்போது அது ஆளும் கட்சி ஓட்டை விழுந்த படகாய் இந்த நாட்டு அரசியற் கடலிலே இதுவரை மிதந்து வந்திருக்கிற வேடிக்கையைத் தான் உணர்த்துவதாய் இருக்கிறது!

நான்தான் திருடினேன், என்று ஒப்புக்கொள்கிறவன்; சாட்சியங்களால் நிரூபிக்கப்படுகிறவன் தண்டனையிலிருந்து தப்புவது கிடையாது!

நான்தான் கொலை செய்தேன்—என்பதை நிரூபிக்கிறவனும் அப்படித்தான்! சட்டம் அவனைச் சும்மா விட்டுவிடுவதில்லை!

—அதேபோலவே நாங்கள் வரிப்பணத்தை வீண் செலவுகட்குப் பயன்படுத்தியது உண்மைதான்; நாங்கள் பொறுப்பற்று உல்லாசச் சகதியில் உருண்டு புரண்டது நிஜந்தான்—என்பதை ஒப்புக் கொள்ளும் இந்த நெறிகெட்டவர்களைத் தீர விசாரித்து; தீர்ப்பு தர வேண்டிய மகத்தான பொறுப்பு இன்று மக்கள் மன்றத்திற்குக் கிடைத்திருக்கிறது!

குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக் கொள்கிருர்கள்!

வழக்கிலே சிக்கல் இல்லை; 'சுற்று வளைசல்' கிடையாது!

—ஆனல் ஒன்று; குற்றவாளி ஏன் குற்றத்தை ஒப்புக் கொள்கிருன்?

'கடந்த கால நடவடிக்கைகள் அவன் மனதைக் குடைகின்றன; இதுவரை தூங்கிக் கொண்டிருந்த மனச்சாட்சி இப்போது விழித்துக் கொண்டு அவன் இதயத்தை வேலெனத் தாக்குகிறது; இனி வேறு மார்க்கமில்லை; உண்மையை உணர்த்துவதுதான் உள்ளத்திலே மலையென வளர்ந்திருக்கும் மாசுதனைக் குறைக்கும்'— என்கிற ஒரே காரணத்தினுலா அவன் அப்படிச் செய்கிருன்?

அல்ல; அல்ல. அதுவல்ல மூல காரணம்! அவர்கள் தவற்றினை உணர்ந்து; துன்மார்க்க நெறியிலிருந்து கடைத்தேறி சன்மார்க்க நெறிக்குக் காலெடுத்து வைக்கப் போகிருர்கள்; புரட்டு வாழ்க்கையின் புன்மைத் தன்மையினைத் தெரிந்து புதுவாழ்வு காணப்போகிருர்கள் — என்பதல்ல இந்தப் 'பிராயச்சித்தப் படலத்'தின் உண்மையான பின்னணி!

இன்று பதவித் தேனைச் சுவைத்துக் கொண்டிருப்பவர்கள் அந்தப் பேரின்பத்திற்காக மோகன கீதம் பாடிக் கொண்டிருந்த பல்லாயிரம் தேனிக்களைக் கொன்றிருக்கிருர்கள்!

தேனிக்களுக்குத் தொல்லை கொடுக்காமலேயே தேனெடுக்கும் தூய வழியிருந்தும் அதைக் கையாளாமல் முறைகெட்ட செயல் மூலம் முன்னணிக்கு வந்திருக்கிருர்கள்; இவர்கள்!

அவ்வளவு ஏன்? அவர்கள் பருகிக் கொண்டிருக்கும் அந்தப் பதவித் தேனிற்காக ஜனநாயக நங்கையே துடிக்கத் துடிக்கக் கொல்லப்பட்டிருக்கிருள்!

அவர்கள் நடத்திவந்த — வருகிற—ஊழல் நிர்வாகம் திறமைக்குத்தீவாந்திர சிட்சை கொடுத்து அனுப்பியிருக்கிறது!

கொடுமை அவர்களது குறைமதியினுல் கொடிகட்டிப் பறந்திருக்கிறது!

அவர்களது ஆதிக்க வெறியினுல் அறிவு தலை குனிந்து அகங்காரம் ஆணை மீதேறிப் பவனி வந்திருக்கிறது!

—இவ்வளவு தவறுகளையும் இழைத்துவிட்டு; விலை மதிக்கவொண்ணு ஜனநாயகத்தையே விலைமகளைவிடக் கேவலமாக நடத்தி விட்டு—அவர்களோ தாங்கள் செய்த பல குற்றங்களில் சிலவற்றைமட்டும் ஒப்புக் கொள்கிருர்கள்; அதற்காக பகிரங்கமாகத் தீர்மானமும் நிறைவேற்றியிருக்கிருர்கள்!

குற்றவாளிகள் பலர்! செய்த குற்றங்களோ பல!

—ஆனல் அதிலே சிலர் சார்பாகத்தான் சில குற்றங்கள் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கின்றன, பகிரங்கமாக!

—இதற்கு என்ன காரணம்? சட்டத்திலே ஒரு இடமுண்டு!

குற்றவாளியே முன் வந்து செய்த குற்றத்தை ஒப்புக் கொள்வானேயானுல் அவன் 'அப்ரூவராக' மாறி விடுவான்! அவனுக்குத் தண்டனைக் குறைப்பு கிடைக்கும்!

—இன்று காங்கிரஸ் மேலிடம் சில குற்றச்சாட்டுகளை மனமுவந்து ஒப்புக் கொள்வதின் உட்கருத்தும் இதுவொன்றேதான்!

தேர்தலிலே இந்த முறை காங்கிரஸ் தற்காலிக வெற்றி பெற்றிருந்தாலும் அது முன்பெல்லாம் பெற்ற வெற்றியைப் போல மிகச் சுலபமாக இருக்கவில்லை! கஷ்டப்பட்டு பெற்ற வெற்றி; அதுவும் வேறெந்தக் காலத்திலும் படாத கஷ்டம்!-இது வரவிருக்கும் தேர்தலை மிகப் பயங்கரமாகக் காட்டியிருக்கிறது, அவர்களுக்கு!

அடுத்து; சமீபத்திய இந்தியச் சரித்திரத்திலே வேறு எந்தச் சமயத்திலும் விதிக்காத அளவு அதிக வரிகளை-ஏழை நடுத்தர வர்க்கத்தவரை நேரடியாகப் பாதிக்கும் கொடிய வரிகளை, இப்போது காங்கிரஸ் அரசாங்கம் விதித்திருக்கிறது. அதனுல் பொதுமக்களிடையே முன்பு எப்போதும் ஏற்பட்டிருக்காத அரசியல் விழிப்பு ஏற்பட்டிருக்கிறது!

—மக்கள் கண்களை அகலத் திறந்துகொண்டு கூர்ந்து கவனிக்கிருர்கள்!

ஊழல்களை மறைத்துநிற்கும் காதித் திரைகளுக்குப் பின்னுல் பொதிந்து கிடக்கும் ஆபாசங்கள் அவர்கள் கண்களுக்குத் தெரிய ஆரம்பித்து விட்டன!

'என்னிடமிருந்து என் வருமானத்தை வரியென்று பிடுங்கிச் செல்கிருயே; அந்த ஒவ்வொரு ரூபாயையும் நீ ஒழுங்காகச் செலவு செய்கிருயா?'— என்று கேள்விமேல் கேள்வி கேட்கிற அளவுக்கு மக்கள் அரசியல் தெளிவு பெற்று விட்டார்கள்!

—இனி மக்களது கழுகுப் பார்வையிலிருந்து தப்ப வேண்டுமானுல்; கொழுந்துவிட்டெரியும் ஒளிவிளக்கைக்கையிலேந்தி கொண்டு அவர்கள் 'போலி நிர்வாகம்' என்னும் இருட்டு மண்டபத்தில் நுழைந்து ஆராய்ச்சி நடத்துவதைத்

✽ 5-ம் பக்கம் பார்க்க

இலட்சிய விளக்கம்தரும் அரசியல்ஏடு!
'தனி அரசு'
(வார இதழ்)
ஆசிரியர்
ஏ. வி. பி. ஆசைத்தம்பி, எம். எல். ஏ.
விலை: 13 புதுக் காசு.
விபரங்கட்கு:—
நிர்வாகி; "தனி அரசு" சென்னை—5.




வெள்ளி 21—6—57 சென்னை

# கலையும், நாமும்!

எலியிருக்கிறது வீட்டிலே என்பதற்காக யாரும் வீட்டுக்கு நெருப்பு வைப்பதில்லை.

புலி உலவுகிறது காட்டிலே என்பதற்காக எவரும் காட்டுக்குத் தீ மூட்டுவதில்லை.

—ஆனால் அரசியலிலேதான் இத்தகைய இழிதகை எண்ணமும்; கெடு நினைப்பும் கொண்ட குறுமதியாளர்கள் வாழ்கிறார்கள்!

திராவிட முன்னேற்றக் கழகம் கலைத் துறையிலே நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறது என்பதற்காகவும்; தங்கள் பிரச்சாரத்திற்குக் கலையையும் பயன்படுத்துகிறது என்பதற்காகவும் கலையையே கொலை செய்துவிடத் தீர்மானித்து; சிலர் தோல்வி கண்டு மூக்காடிட்டு ஓடவும்; வேறு சிலர் புதிதாக அந்த முயற்சியிலே ஈடுபட்டு மூக்குடைபட்டுத் திரும்புவதையும் நாடு இன்று கண்டு வருகிறது.

தி. மு. கழகத்தவர் கலைத்துறையிலே ஈடுபட்டிருப்பது வீட்டிலே எலியிருப்பதைப் போலவோ; காட்டிலே புலி இருப்பதைப்போலவோ அல்ல! ஏனெனில் அது எலியைப் போல திருட்டுத்தனம் செய்ய நினைத்தது கிடையாது; அல்லது புலியைப்போல கொடுமையே உருக்கொண்டு உலவியதும் இல்லை.

—இருந்தாலும் குறுமதியாளர்கள் கலைத்துறை இருப்பதால்தான் தி. மு. கழகம் செல்வாக்கு பெற முனைகிறது—என்ற நோக்கோடு அரசியல் துறையிலே தி. மு. கழகத்தோடு மோதிப் பார்த்துத் தோற்றுவிட்டு; அது பணியாற்றி வருகிற கலைத் துறையையே ஒழித்துக்கட்டுகிற வஞ்சகப் போக்கிற்குத் தயார் செய்துகொண்டு வருகிறார்கள்!

திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு தேசிய எழுச்சி முகாம்! ஒரு தேசிய இயக்கம் கலையோடு தொடர்பு வைத்துக்கொண்டிருப்பதிலே யாரும் எந்த விதத்திலும் தவறு காண முடியாது.

மொழி; கலை; கலாச்சாரம்-போன்ற துறைகள்தான் ஒருஇனத்தை இன்னொரு இனத்திலிருந்து பிரித்துக் காட்டுகின்ற தனித் தன்மைகள்.

பட்டை தீட்டப்பட்ட வைரத்தையும்; போலி கண்ணாடித் துண்டுகளையும் நாம் எப்படிப் பிரித்துணர்கிறோம்?

வைரத்திற்குத் தனி ஒளி இருக்கிறது; பட்டைக் கண்ணாடி அதற்குப் பக்கத்திலே பல்லிளிக்கிறது!

—வைரத்தின் தனித் தன்மைகள் அவை! அதே போன்றுதான் ஒவ்வொரு தேசிய இனமும் தங்களுக்கென்று சில தனித்தன்மைகளை வைத்திருப்பதால்தான் அவைகள் தனித் தேசிய இனமென்று அழைக்கப்படுகின்றன.

அந்தத் தனித் தன்மைகள் அன்னியர் ஆட்சியில் தனித்து இருக்க முடியாத என்ற நிலைமை உருவாகுமேயானால்; அல்லது அன்னியர் ஆட்சியால் அந்தத் தனித்தன்மைகள் ஒழிக்கப்பட்டுவிடும் என்ற பயமும் பீதியும் உதயமாகுமேயானால் அந்தத் தேசிய இனம் புலியாக மாறுகிறது; போராடப் புறப்படுகிறது!

தி மு. கழகத்தைப் பொறுத்த வரையில் திராவிட முன்னேற்றக் கழகம்-தமிழ்மொழியையும்; தமிழ்க் கலையையும்; தமிழ்க் கலாச்சாரத்தையும் காத்து வளர்த்து வரும் ஒரே இயக்கம் என்கிற நிலைமை இன்று நாட்டு மக்களிடத்திலே பதிந்து விட்டது.

தி. மு. கழகத்தவர் 'கண்டு' மறுமலர்ச்சித் தமிழைப் பயன்படுத்திட; சுவைத்திட இன்று நாட்டிலே ஒரு தாகமே ஏற்பட்டிருக்கிறது.

தி. மு. கழகத்தவர்தான் தமிழ்க் கலாச்சாரத்தின் தூதுவர் என்பதை நாட்டு மக்கள் ஒப்புக் கொண்டு விட்டார்கள்!

அதேபோலத்தான் கழகம் கலைத் துறையிலே தொடர்பு வைத்துக் கொண்டு; அதன் உயர்வுக்குப் பாடுபட்டு வருகிறது!

கழகம் கலைத் துறையிலே தொடர்பு வைத்துக்கொண்டிருக்கிறது; ஏனெனில் அது ஒரு தேசிய இயக்கம்—தேசிய இயக்கங்கள் மொழி-கலை-கலாச்சாரத்திற்காகப் பாடுபடுவதுதான் உலக அரசியல் காட்டும் பாடம்!

—இதைப் பலர் புரிந்து கொள்ளாமல் பிதற்றுகிறார்கள்; சிலர் புரிந்து கொண்டும் புரியாததுபோல் பிரச்சினையின் போக்கையே மாற்றுகிறார்கள்!

வேறு சிலர் இருக்கிறார்கள்; அவர்கள் 'இந்த வாய்ப்பு நமக்குக் கிடைக்கவில்லையே'—என்று பொறாமைப்படுபவர்கள்; அவர்களைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை.

—இதில் 'கனமாகி'யிருக்கும் கக்கன் எந்தப் பிரிவினைச் சேர்ந்தவரோ; நமக்குத் தெரியவில்லை!

—அவர்தான் நாகர் கோவில் அருகேயுள்ள குன்னுவிளை என்ற ஊரில் பேசும்போது குறிப்பிட்டாராம்—

"தி. மு. கழகத்தவர் சினிமாவுக்கு வசனமெழுதிச் சம்பாதிப்பவர்கள்"—

என்று!

சினிமாவுக்கு வசனமெழுதுவது பஞ்சமா பாதகங்களில் ஒன்றைப் போலவும்; அந்தப் பாதகங்களைப் புரிந்தவர்கள் தி. மு. கழகத்தவர்—என்பது போலவும் நினைத்துக் கொண்டு புன்மை வாதத்தைக் கக்கியிருக்கிறார், கக்கன்!

"சேரியிலே வாழ்பவர்கள் அனைவரும் பள்ளு பறையர்கள்"—என்று ஜாதித் திமிர் பிடித்தவன் சொல்லும் வாசகங்களிலே எவ்வளவு ஆணவமும்; அதே நேரம் செருக்கும் தொனிக்குமோ அவ்வளவும் தொனிக்கிறது 'தி. மு. கழகத்தினர் அனைவரும் சினிமாவுக்கு வசனமெழுதிச் சம்பாதிப்பவர்கள்' என்ற கனம் கக்கன் அவர்களது பேச்சிலே!

ஜாதி வெறி பிடித்தவன் தாழ்த்தப்பட்டவர்களை இழிந்தவர்கள் என்றும், இழிந்த தொழில் செய்பவர்கள் என்றும் நினைத்துக்கொண்டிருக்கிறான்.

அதே போலத்தான் கனம் கக்கனும் சினிமாவுக்கு வசனமெழுதுவதை இழிந்த தொழிலென்று கருதுகிறார் போல் இருக்கிறது.

சினிமாவுக்கு வசனமெழுதிச் சம்பாதிப்பது கொடுமையாம்! இழுக்காம்! கூடாத தொழிலாம்!—கூறுகிறார் அமைச்சர்!

அப்படியானால் இந்த அரசாங்கம் சினிமாவுக்கு 'பொழுது போக்கு வரி' என்னும் வரியொன்றை விதித்து சினிமாவின் மூலம் பணம் சம்பாதிக்கிறதே; அது கொடுமையல்லவா? கூடாத தொழில் அல்லவா?

—அப்படிக் கேவலமான சம்பாத்தியத்தின் மூலம் பொருளீட்டி வாழ்ந்து வருகிற ஒரு அரசாங்கத்திலே மந்திரி வேலை பார்த்து; அந்தக் கேவலத் தொகையிலிருந்து சம்பளம் வாங்கி வாழ்க்கை நடத்துவது கேவலத்திலும் கேடு கெட்டக்—கடைந்தெடுத்தக் கேவலமல்லவா?

—அமைச்சர் இவற்றையெல்லாம் நினைத்துப் பார்க்காமல் பேசியிருக்கிறார்!

பாவம்; தி. மு. கழகத்திலாவது சினிமாவுக்கு வசனம் எழுதுபவர்கள் இருக்கிறார்கள்!

காங்கிரசிலே யார் இருக்கிறார்கள்?

கள்ள மார்க்கெட்காரர்கள்

பகற் கொள்ளைக்காரர்கள்

'கள்ளச்சாராயம் காய்ச்சி'கள்

ரவுடிகள்

காலிகள்

—இவர்கள் அல்லவா கதர்ப் போர்வையிலே; அதிகாரத்தின் அரவணைப்பிலே காங்கிரசிற்குள்ளே முகாமடித்துக்கொண்டிருக்கிறார்கள்!

இவற்றையெல்லாம் மறந்துவிட்டுத்தான் உளறியிருக்கிறார், அமைச்சர். அந்தோ; பரிதாபம்—நிர்வாகத்திற்கு அவர் புதிதுபோலவே அனைத்திற்கும் அவர் புதிதுபோலிருக்கிறது!

# அரைக்கிணறு தாண்டவேண்டாம்; ஆபத்தில் சிக்க வேண்டாம்!

✻ 8-ம் பக்கத் தொடர்ச்சி

★★★ சமூக நலத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 531 கோடி. ஆனால் இந்த இனத்தில் செலவழிக்கப் படாமல் இருக்கிற தொகை 108 கோடி.

—இந்த 108 கோடி ரூபாய்களிலே பொது மக்களது அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான கல்வி; வீடுகட்டுதல் முதலியனவும் அடங்கியிருக்கின்றன ஒரு நாட்டு முன்னேற்றத்திற்குக் கல்வியும், வீட்டு வசதியும் எவ்வளவு முக்கியமானதென்று நாம் குறிப்பிடத் தேவையில்லை. இருந்தும் அது போன்ற முக்கியத் தேவைகளுக்கு இந்தக் காங்கிரஸ் ஆட்சியில் உரிய செலவு செய்யப்படவில்லை.

★★★ ஒரு நாட்டில் பிரமாண்டமான ஆலைகளை அமைத்து விட்டால் மட்டும் போதாது அந்த ஆலைகளிலே காலை முதல் மாலை வரை வேலை செய்யும் தொழிலாளிகளின் நலன்களையும் அக்கரையுடனும் பொறுப்புணர்ச்சியுடனும் கவனிக்க வேண்டும்.

—இருந்தும் தொழிலாளர் நலனுக்காக மிகக் குறைந்த தொகையான 71 கோடி ரூபாய்களைத்தான் ஒதுக்கியிருந்தார்கள்.

ஆனால் இதில் வேதனை என்னவென்றால் மேற்சொன்ன தொகையில் பாதிகூடச் செலவு செய்யப்படவில்லை.

★★ அடுத்து வருவது தொழில்களும் சுரங்கமும். இந்தத் துறையிலே செய்யப்படும் முன்னேற்றம்தான் இந்திய உபகண்டத்துப் பொருளாதாரத்திலே ஒரு மாபெரும் திருப்பத்தை ஏற்படுத்துவதாகும்!

—இந்த அபிவிருத்திகளைச் செய்வதற்காக மொத்தம் திட்டமிடப்பட்ட தொகை 1[illegible]8 கோடி ரூபாய். ஆனால் பாதிக்கு மேல் (அதாவது 92 கோடி ரூபாய்கள்) இன்னும் செலவழிக்கப்படாமல் இருக்கிறது!

✻✻✻ ஒரு காங்கிரஸ் நண்பரை அழைத்துக் கேளுங்கள்; 'காந்தியாரின் வார்த்தைகளைக் காப்பாற்றிக் கிராமங்களை முன்னேற்றுவதற்குத்தான் ஐந்தாண்டுத் திட்டமே போட்டிருக்கிறோம்!'—என்று கதை யளப்பார்கள்! "கிராம இந்தியாவின் தரத்தை உயர்த்துவதற்குத்தான் திட்டம்!"—என்று அழுத்தம் திருத்தமாகக் கூறுவார்கள்!

—ஆனால், நடந்திருப்பது என்ன?

—அவைகளுக்காக மொத்தம் திட்டமிடப்பட்ட தொகையான 29 கோடி ரூபாயில் இன்னும் 10 கோடி ரூபாய்கள் செலவழிக்கப்படாமலேயே இருக்கின்றன!

✻✻✻ அடுத்ததாகக் குறிப்பிட வேண்டுமானால் "இதர தொழில்களும் கனிப் பொருள்களும் (தொழில் விஞ்ஞான ஆராய்ச்சிஉட்பட)"—என்னும் பிரிவினைத்தான் சொல்லவேண்டும்!

தலைப்பைப் பார்த்தாலே இந்தப் பிரிவின் முக்கியத்துவம் எதற்கெனப் புலப்படும்!

—இதற்காகத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கும் ரூபாய்கள் 188 கோடியாகும்!

ஆனால் செலவழிக்கப்பட்டிருப்பதோ 56 கோடி ரூபாய்கள்தான்!

✻✻✻ இவைகளோடாவது தீர்ந்ததா?—அதுதான் இல்லை! 'நீர்ப்பாசனமும், மின்சாரமும்' என்ற தலைப்பில் மட்டும் என்னவென்று நினைக்கிறீர்கள்?

—இந்தியாவிலுள்ள கோடிக் கணக்கான கிராமங்களின் மறுவாழ்க்கையை நிர்ணயிக்கும் தன்மை கொண்டது இந்தப் பிரிவுதான்!

—ஆனால் இந்த வகையில் இன்னும் 62 கோடி ரூபாய்கள் செலவிடப்படாமல் இருக்கிறதாம்!

✻✻✻ "சமுதாய நல அபிவிருத்தி"—இன்று அதிகமான பிரச்சாரத்திற்கு ஆளாகியிருக்கும் திட்டத்தின் அம்சம்!

ஒவ்வொரு 'கதர்க்குல்லா'யும்' ஓட்டு வேட்டையாடுவதற்கு இதைத்தான் பயன்படுத்தி வருகிறார்கள்.

—இருந்தும் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த அம்சமாவது குறித்த அளவு வெற்றியைத் தந்திருக்கிறதா?

இல்லை.

33 கோடி ரூபாய்கள் இன்னும் செலவழிக்கப் படவில்லையாம்!

★★★ ஆலைகளையும், அணைக்கட்டுகளையும், அதன் மூலம் விவசாயத்தையும் பெருக்கி விட்டால் மட்டும் போதுமா? ஆலைப்பொருள்களையும், விவசாயப் பொருள்களையும் சந்தைக்குக் கொண்டு செல்வதற்கு நல்லசாலைகள் வேண்டுமே!

—இந்த அவசியத்தை முன்னிட்டு போக்குவரத்து வசதிகளைப் பெருக்குவது சம்பந்தமாகவாவது திட்டத்தில் வெற்றியை அடைந்திருக்கிறார்களா?

இல்லை!

இன்னும் 35 கோடி ரூபாய்கள் செலவழிக்கப்பட வேண்டும், இந்த இனத்திலே!

★★ மேலும் 'பலதரப்பட்டவை' என்னும் தலைப்பிலே இன்னும் 11 கோடி ரூபாய்களுக்குத் துண்டு விழுந்திருக்கிறது!

—ஆகமொத்தம் முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே மொத்தம் 366 கோடி ரூபாய் இவ்வண்ணம் செலவழிக்கப்படாமல் இருக்கின்றன.

அரைக் கிணறு தாண்டுவதைப்போல இந்த அரசாங்கம் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஓரளவைத்தான் நிறுவி முடித்திருக்கிறது.

—366 கோடிகள் திட்டமிட்டபடி செலவழிக்கப்படவில்லை.

விற்பனையாகிறது!

முத்தாரம்

ஜூன் இதழ்!

—இதை எப்படி நாம் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் வெற்றி என்று கூறமுடியும்!

கிணறு தாண்ட முற்பட்டிருக்கும் இவர்கள் முதலிலேயே தங்கள் சக்தி இவ்வளவுதான் என்பதை ஓரளவு மதிப்பிட்டிருக்க வேண்டும்; அதன் பிறகுக் காரியத்தில் ஈடுபட்டிருக்க வேண்டும்! அதற்குத் தகுந்தவாறு தாங்கள் தாண்டுவதற்கேற்ற சிறிய கிணற்றினைத் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும்!

—அதாவது திட்டத்திற்குக் குறைந்த அளவு தொகையினையே செலவு செய்யமுற்பட்டிருக்க வேண்டும்;

அல்லது: ஐந்தாண்டுகளில் செலவு செய்து முடிப்பது என்பதை ஏழாண்டுகளில் அல்லது எட்டு ஆண்டுகளில் செலவு செய்து முடிப்பது என்றாவது வகைசெய்திருக்க வேண்டும்!

—இரண்டையும் செய்தார்களில்லை!

ஏன்?

திட்டம் நினைத்தபடி நிறைவேறாது என்பது அவர்களுக்குத் தெரியாமலா இருக்கும்? தெரியும்!

இருந்தும் அவர்கள் ஏன் அப்படிச் செய்தார்கள்?

ஏதோ தாங்கள் பிரமாண்டமான; ஆசியாவிலேயே வேறு எந்த நாடும் சாதித்திராத காரியத்தில் இறங்கியிருப்பதாக வெளிநாடுகளுக்குக் காட்டிக் கொள்ள விருப்பம்!

அதுவுமின்றி அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதைப்போல பண்டித நேருவுக்கு ஒரு குழந்தை மனப்பான்மை!

அவர் மேலை நாடுகளில் படிப் படியாக உருவாகிவந்த பெரும் பெரும் ஆலைகளைக் கவனத்தில் வைத்துக் கொண்டு அலாவுத்தீன் பூதத்தைப் போல ஒரு நாள் இரவில் சாகிகக் கஷ்டமான காரியத்தைச் சாதிக்க நினைக்கின்றார்!

அதனால்தான் பண்டிதர் அரசாங்கம் வாய்ப்பந்தல் போடுவதைப்போல காகிதத்திலே பெரும் பெரும் திட்டங்களைத் தீட்டி விடுகிறது!

முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலம் முடிந்து விட்டது. இருந்தும் 366 கோடி ரூபாய்கள் தட்டமிட்டப்படி செலவழிக்கப்படவில்லை.

அதேபோல்தான் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமும்; வீண் ஜம்பம்!

(ஆதாரம்: பிளிட்ஸ் ஜூன் 15, 1957)

# 'அப்ரூவராகும்' குற்றவாளிகளே! ஆடிப் பாடினால் குற்றம் மறையுமா?

✻ 2-ம் பக்கத் தொடர்ச்சி

தடுத்து நிறுத்த வேண்டுமானால், இனி காங்கிரஸ் மேலிடம் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான்:

## நாடகமாட வேண்டும்!

—அந்த நாடகம் நாட்டு மக்களின் கவனத்தைக் கவருவதாக அமைய வேண்டும்!

—இந்த ஞானோதயம்கூட அவர்களுக்குத் திடீரென்று தான் உதயமாகியிருக்கிறது!

உதாரணமாக; முதலில் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் மந்திரிகளது சம்பளத்தைக் குறைக்க முடியாது என்று கர்ஜனை புரிந்த நேரு இப்போது தனது சம்பளத்தைக் குறைத்துக் கொள்ள முன் வந்திருக்கிறாராம்!

இதுவரை மாதம் 2250 ரூபாய் அடிப்படைச் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த அவர் இனி மேல் மாதம் 1975 ரூபாய்தான் வாங்கப்போகிறார்!

அதாவது பண்டிதர் 275 ரூபாய், அல்லது 10 சதவீதத்தைக் குறைத்துக் கொண்டிருக்கிறார்! அதைப் போலவே அவரது சகாக்களும் செய்யப் போகின்றனர்!

அதுவும் எப்போது?

"எனக்கே சம்பளம் கட்டிவரவில்லை. என்னுடைய புத்தகங்கள் விற்பனையாகி; அதனால் எனக்குக் கிடைக்கும் 'ராயல்டி' தொகை கிடைக்காவிட்டால் நான் மிகவும் கஷ்டப்படுவேன்!"

—என்றெல்லாம் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக்கூட்டத்தில் 'ஒப்பாரி' வைத்த பிறகு புதிய தெளிவுபெற்று 'மிகப் பெரிய' தொகையாக 275 ரூபாயைக் குறைத்துக் கொள்வதற்கு முன் வந்திருக்கிறார்!

நாடகத்தின் ருசியான கட்டம் இதுமாத்திரமல்ல—

இப்போதிருக்கிற பெரிய வீட்டிலிருந்து அவர் சிறிய வீட்டிற்குக் குடி போகப் போகிறார்.

பண்டிதர் வீட்டை மாற்றுவதின் நோக்கம் என்ன?

சிக்கனம்!

செலவைக் குறைப்பது!

ஆனால் உண்மையில் நடக்கப் போவது என்ன?

டெல்லியிலே எத்தனையோ வீடுகள்—சிறிய வீடுகள் இருக்கின்றன!

பண்டிதர் அவற்றிற்கெல்லாம் குடிபோகப் போவதில்லையாம்!

அவருக்காக சிறிய வீடொன்றைப் புதிதாகக் கட்டுகிறார்கள்.

இதற்காகும் செலவு என்ன?

லட்சம் ரூபாய்களுக்கும் மேலாம்!

பண்டிதர் இப்போதிருக்கிற பெரிய வீட்டின் ஒரு சிறிய பகுதியில் குடியிருந்து கொண்டு; வேண்டாத மீதிப் பகுதியை வாடகைக்கு விட்டிருக்கலாம்! அல்லது அந்த வேண்டாத இடத்தில் வேறு ஏதாவதொரு அரசாங்க அலுவலகத்தை வைத்துக் கொண்டிருக்கலாம்!

ஆனால் இவைகளையெல்லாம் விட்டுவிட்டு லட்சம் ரூபாய்க்கு மேல் செலவு செய்து நிர்மாணிக்கப்பட இருக்கிற புதிய—சிறிய—வீட்டிற்குக் குடி போகப் போகிறாராம்!

லட்சம் ரூபாய்களுக்குமேல் இந்தப் பஞ்சகாலத்தில் செலவு—அதுவும் தவிர்க்கக்கூடிய செலவு—இதற்குப் பெயரா சிக்கனம்? இதற்குப் பெயரா செலவுக் குறைப்பு?

அது மட்டுமா? அந்த நாடகத்தில் 'கிளைமேக்ஸ்' கட்டம் வேறொன்றுமிருக்கிறது—

இனிமேல் பண்டித நேரு மோட்டார் காரில் தனது அலுவலகம் செல்லமாட்டாராம்!

மோட்டார் சைக்கிள் அல்லது ஸ்கூட்டரில்தான் அவர் சவாரி செய்யப் போகிறாராம்!

சென்னை வீதிகளிலே பார்க்கலாம்; தம்பதி சமேதராயும்; குழந்தை குட்டிகளுடன் பலர் 'ஸ்கூட்டர்' சைக்கிளிலே சவாரி செய்வார்கள்!

இனிமேல் இந்த உபகண்டத்துப் பிரதமரும்; ஆசியாவின் ஜோதியுமான பண்டித நேரு தனது அருமைக் குமாரி இந்திரா பிரியதர்சினியுடனும் வீட்டிலிருந்து புறப்பட்டுத் தனது அலுவலகத்திற்குச் செல்லலாம்!

—அதற்கு இப்போது தனது வீட்டுத் தோட்டத்தில் பண்டிதர் ஒத்திகை பார்த்துக் கொண்டிருக்கிறாராம்!

அந்த ஸ்கூட்டர் சைக்கிளிலேயே நேருப் பண்டிதர் டில்லி மாநகரிலே பார்ப்பதற்கு முக்கியமான இடங்களுக்கு விஜயம் செய்யவும் போகிறாரா!

பண்டிதர் சம்பளத்தைக் குறைத்துக் கொள்கிறார்!

சிறிய வீட்டிற்குக் குடிபோகிறார்!

ஸ்கூட்டர் சைக்கிளில் பிரயாணம் செய்ய இருக்கிறார்!

—சிக்கனத்தின்பால் திடீரென்று சிந்தையைச் செலவிட்டிருக்கும் 'இந்த வீராதிவீரருக்காக' முன்பெல்லாம் எவ்வளவு ஆயிரக்கணக்கான ரூபாய்கள் வீணாகியிருக்கின்றன தெரியுமா?

அவரது விஜயம் ஒவ்வொன்றிற்காகவும் எவ்வளவு நூற்றுக் கணக்கான ரூபாய்கள் விழலுக்கு இறைத்த நீராக மாறியிருக்கின்றன தெரியுமா?

இதோ, உதாரணத்திற்கு ஒன்று!

1956-ம் ஆண்டு ஆகஸ்ட்மாதம் பூனா நகரத்திலேயுள்ள ரேஸ் கோர்ஸ் மைதானத்திலே திலகரது நூறாவது பிறந்த நாள் விழா நடைபெற்றது! மகாராஷ்டிராப் பிரதேசக் காங்கிரஸ் கமிட்டி இதை ஏற்பாடு செய்திருந்தது! இந்தக் கூட்டத்தில் பண்டித நேருவும் கலந்து கொண்டார்.

அந்தக் கூட்டத்திற்கு அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி நிதியுதவி செய்திருந்தது!

இதில் கலந்துகொண்ட இந்தியாவின் முதன் மந்திரியோடு வழக்கமான அவரது அலுவலகப் பணியாளர்களும் சென்றிருந்தனர். அதோடு 'நுண்ணறிவு இலாக்கா'வின் டைரக்டரும் சென்றிருந்தார்.

இதற்கு முன்பாகவே பாதுகாப்பு விஷயங்களைக் கவனிப்பதற்காக மேல் குறிப்பிட்டிருந்த நுண்ணறிவு இலாக்காவிலிருந்து இரு 'டெபுட்டி'களும் பூனாவிற்குச் சென்றிருந்தனர்!

அதோடு பாதுகாப்பு இலாக்காவின் கிளையினரும் (செக்கியூரிட்டி சர்விஸ் பிராஞ்ச்) எட்டு நாட்கள் முன்னதாகவே பூனாவில் பிரசன்னமாகியிருந்தனர்!

பண்டிதரும் அவரது குழுவினரும் ஆகாயவிமானத்தின் மூலம் வந்திறங்கினர்!

பூனா நகரிலுள்ள போலிசாரின் எண்ணிக்கை 2,000. இதுபோதாதென்று மற்ற ஜில்லாக்களிலிருந்தெல்லாம் 5,000-முதல் 8,000 வரை போலீஸ்காரர்கள் வரவழைக்கப்பட்டிருந்தார்கள்!

இவர்கள் அனைவரும் ரயில், பஸ், கார்—ஆகியவற்றின் மூலமாகப் பிரயாணம் செய்தார்கள்!

ஒரு நாள் கூட்டத்திற்குப் பாதுகாப்பளிக்கவந்த இந்தப் போலீஸ்காரர்கள் மொத்தம் பூனாவிலே தங்கி முகாமடித்திருந்த நாட்கள் 3.

—இந்தப் போலீஸ்காரர்களில் பலர் போலீஸ் உடையிலும், பலர் உடையணியாமல் 'மப்டி'யிலும் பொதுமக்களோடு பொதுமக்களாய் கூட்டத்தில் கலந்துகொண்டனர்! (இவர்கள் பொதுக் கூட்டத்தைப் பெரிதாகக் காட்டுவதற்

✻ 10—ம் பக்கம் பார்க்க



...நாடகத்தின் 'கிளைமேக்ஸ்' கட்டம்...

## நீட்டோலை

# அந்தச் சொல் அலங்கோலம்

அன்புள்ள பொன்முடி !

நமது சம்பத்தும்; தர்மலிங்கமும் லோக் சபாவில் பேசுவதற்கு வாய்ப்பளிக்கப்படவில்லை அல்லவா; அதுபற்றி அரசியல் வட்டாரத்தில் எத்தனையோவித எண்ணங்கள்! எத்தனையோவிதப் பேச்சுக்கள்! லோக் சபாவின் முதல் கூட்டம் என்ற காரணத்தினால் வெளிநாட்டுப் பார்வையாளர்கள் மிக உன்னிப்பாக சபை நடவடிக்கைகளை கவனிப்பார்கள் என்றும், அப்படிக்கவனிக்கும் நேரத்தில் சம்பத்தின் குரல் எழுமேயானால் ஏகபாரதக் கொள்கையின் தலையில் இடி விழுந்து விடுமென்றும், "கொடி பறக்குது எங்கணும்" எனக் கம்பீரமாகக் கொலு விருந்து காட்டும் நேருவுக்குத் தென்னகத்தில் பிடி தளருகிறது; பிடரியில் அடி விழுகிறது; என்ற சேதி வெளியார் செவிகளில் நுழைந்து விடுமென்றும், அச்சம் அலைமோதியசாலேயே அவர் நாவசையாமல் நடுக்கத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார்களாம்; ஜனநாயகம் பேசும் அரசோச்சிகள்! இப்படியொரு சேதி டில்லி வட்டாரத்திலே பெரும்பாலோரால் பிரதிபலிக்கப்படுகிறது.

'ஆங்கில' ஏடொன்று. லோக் சபாவில் இருந்த அனைவரது கவனமும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்களான இருவர் மீதுதான் இருந்தது எனக் குறிப்பிட்டு விட்டு. அவர்களுக்குக் கருத்தறிவிக்கும் சந்தர்ப்பம் ஏற்படாமையையும் அறிவித்திருக்கிறது.

நமது கழகத்தைப் பற்றிய அச்சம் வட புலத்து ஆதிக்கவாதிகளை எந்த அளவுக்கு ஆட்டிப்படைக்கிறது என்பதற்கு இன்னுமொரு எடுத்துக்காட்டு!

அகில இந்தியக் காங்கிரஸ் பொதுக்குழு கூடியபோழ்து காங்கிரசில் கரையான்கள் புகுந்து விட்டன; கனவான்களின் புகலிடமாகி விட்டது காங்கிரஸ்; திசை மாறிய கலமாகி விட்டது என்றெல்லாம் கண்ணீர் வடித்தார் அல்லவா நேரு; அப்போது அதைத் தொடர்ந்து காங்கிரஸ் தலைவர் தேபர் ஒரு ரகசியச் சுற்றறிக்கையை உறுப்பினர்களுக்கு அனுப்பி வைத்தாராம். அந்த அறிக்கை முழுதும் ஒப்பாரியும் புலம்பலுந்தானாம்!

கேரளத்திலே காங்கிரஸ் ஆட்சி அமையாமற் போனது குறித்துக் கலக்கம் குடிகொண்டிருந்ததாம், அந்த அறிக்கையில்! நம்மைப்பற்றியும் தேபர் மறந்திட வில்லையாம்! இங்கிருக்கிற "ஏனோதானோ"க்களும், "எடுபிடி"களும் நமது கழகத்தின் வளரும் சக்தியை ஒத்துக் கொள்ள மறுக்கிறார்கள் எனினும், தேபர் உண்மையையொளிவு மறைவின்றி ஒப்புக்கொண்டு நிலைமை விளக்கம் பெற்றிருக்கிறார் என்பதை அவரது அந்தரங்க அறிக்கை சுட்டிக் காட்டுகிறது. நாட்டைப் பிரிக்க வேண்டுமென்ற கட்சிக்குப் பதினேழு லட்சம் மக்கள் ஆதரவு காட்டி வாக்களித்திருக்கிறார்கள் என்பது கவலையோடு கவனிக்க வேண்டிய விஷயமாகும் என்ற கருத்தை தேபரின் அறிக்கை எதிரொலிக்கிறது.

இதிலிருந்து என்ன தெரிகிறது பொன்முடி! சம்பத்தும், தர்மலிங்கமும் வாய் திறப்பது எவ்வளவு ஆபத்தானது என்று டில்லி வட்டாரம் கருதியிருக்குமென்று புலப்படுகிறதல்லவா?

புராணத்திலே படித்திருக்கிறோமே; கிருஷ்ணன் வாய் திறந்தான், மண்ணையள்ளிப் போட்டுக் கொண்டு என்று! அப்படித் திறந்தபோது ஈரேழு லோகங்களும், அதல, விதல, சுதல, பாதாளங்களும், பரமனும் பார்வதியும், பிரமனும் கலைமகளும், அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் தெளிவுறத் தெரிந்ததாம்!

அதுபோலவே நமது சம்பத்தின் வாய் திறந்திருக்குமேயானால், அகில உலகிற்கும் ஆகாய மார்க்கமாகப் பறந்து சென்று மேனனும், மேன்மைமிகு நேருவும் பறைசாற்றுகிறார்களே; பாரத வர்ஷத்தின் ஈரைந்தாண்டு திட்டத்தின் இணையற்ற வெற்றிகள் பற்றி —அதன் உண்மையான படப்பிடிப்பு என்ன என்பது அனைத்துலகிற்கும் விளங்கிப் போயிருக்கும். மேலேழு கீழ் ஏழு லோகங்கள் தெரியாவிட்டாலும், மேம்பட்டோர், கீழ்ப்பட்டோர், முறையே இன்ப சொர்க்கத்திலும், துன்ப நரகத்திலும் உழலுகின்ற உருக்க மிகு காட்சி தெரிந்திருக்கும். திட்டத்திலே தென்னகம் வஞ்சிக்கப்படும் கொடுமை புலப்பட்டிருக்கும். உருப்படாத் திட்டங்களும், ஊழல் மலிந்த செலவுகளும், உடைந்து போன பாட்டாளியின் நெஞ்சங்களும், உருகி, உள் சோர்ந்து எலும்புருவாய்க் காட்சிதரும் ஏழையர் அணிவகுப்பும், ஏங்கிடுவோர் பெரு வரிசையும் ஏற்றமிகக் கொண்டவராம், எல்லோர்க்கும் நல்லவராம் ஆற்றல் தனிபெற்றவராம் எனப் புகழ்சான்ற நேரு துரைதேயத்தில் எங்கெங்கும் காணலாம் மிக மலிவாய் என்ற காட்சி உதயமாகியிருக்கும்! இதனால் தான் போலும் சம்பத்தை வாய் திறக்க விடவில்லை!

கண்ணனோ மண்ணைத் தன் வாயில் போட்டுக் கொண்டான். சம்பத், கண்ணிலே புனல் பெருகத் தமிழகத்து மண்ணின் அடிமைநிலை குறித்துப் பேசிவிட்டு. ஆற்றலற்று ஆதிபத்ய வெறிகொண்டு தென்னகத்தை அடிமையாக்கி வைத்திருக்கும் இழிநிலையை எடுத்துக் காட்டிவிட்டு; வெளிநாட்டில் தற்பெருமைத் தமுக்கடித்துத் திரியும் 'சூடாமணி"களின் வாயிலன்றோ மண்ணைத் தூவியிருப்பார்!...

தி. மு. க. உறுப்பினர்களைப் பேச விடாததற்கான காரணங்களை அரசியல் தெளிவுமிக்கோர் அனைவருமே புரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் தினமணிக் கதிர்—அதிமேதாவித்தனமாக, கிண்டல். நகைச்சுவை என்ற பெயரால் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறது.

சம்பத்தும் தருமலிங்கமும் லோக் சபாவில் அடுக்குச் சொல்லில் பேசுவதில்லையென்று உறுதியளித்தால் அவர்கள் பேச அனுமதிக்கப்படலாம்.

—இப்படியொரு நகைச்சுவையை நச்சு நினைப்போடு "கதிர்" தருகிறது. எதிர்க்கட்சியிலுள்ளோர் யாரைப் பார்; அவர்கள் அனைவருக்குமே இப்போது ஒரு "மேனியா" வளர்ந்து விட்டது; நம்மைப் பார்த்து அடுக்குச்சொல்காரர்கள் என்று கேலி பேச!

சென்னை சட்ட சபையில் பேசிய நிதி அமைச்சர்கூட பெண்களிடம் உறுப்பினர்கள் கண்யமாக நடந்து கொள்ள வேண்டும்; இது சினிமா நாடகமல்ல; அதுபோல பேசுவதற்கு, என சுட்டிக்காட்டி, அவலை நினைத்து உரலை இடித்த அத்தைப்பாட்டிபோல அடுக்குச் சொல்லையும் நம்மையும் நினைத்துக் கொண்டு ஏதோ அறிவுரை பகன்றார். பெண்களிடம் கண்யமற்ற வகையில் பேச வாய்ப்புள்ள துறை சினிமா நாடகமென நிதியமைச்சர் திருவாய் மலர்ந்தருளினார் என்பது தானே அவர் பேச்சிலே கிடை

நூன்கனு கூலி உயர்வு கேட்கும் குப்பை கூட்டுகிற தொழிலாளியிடம் –உழைப்பிலே மதிப்பிருக்கிறது' என்ற தத்துவத்தைக் கற்றுக்கொண்டிருக்கிற நகரமன்ற உருப்பினர்கள். 'நாங்களே தெருவைக் கூட்டுகிறோம், பாருங்கள்' என்று சொல்லி ஒரு நாளைக்கு பெரிய துடைப்பத்தை எடுத்து அதற்கு முதல் நாளே மனைவி யிடத்திலே. 'இடுப்பைக் குனிந்துதான் பெருக்க வேண்டுமா? நிமிர்ந்து பெருக்கக்கூடாதா?' என்று கேட்க, உடனே அவருடைய மனைவி 'நிமிர்ந்து பெருக்கினால் எப்படிக் குப்பை போகும்?" என்று சிரிக்க, 'பார், நாளைய தினம் நான் பெருக்கப் போகிறேன்' என்று சொல்ல, 'உங்களுக்கு ஏன் அந்தத் தலையெழுத்து?' என்று அந்த அம்மையார் சொல்ல, 'இது தலையெழுத்தல்ல; பத்திரிகையிலே கொட்டையெழுத்திலே வரும்' என்று சொல்லிவிட்டு, மறுநாள் காலையிலே தெருவைச் கூட்டுவதைப்போல நாலைந்து நகராட்சிமன்ற உறுப்பினர்கள் கூட்ட, அதை, தொலைவிலே இருக்கிற 'காமிரா'க்காரர் பார்த்து எடுக்காமல் இருக்க, இவர் பார்த்து. 'ஏன் எடுக்க வில்லை?' என்று கேட்க, 'தலைவர் கூட்டட்டும் எடுக்கிறேன்' எனறு அவர் சொல்ல; 'ஐயா, நானும்கூட தலைவராகக் கூடும்; ஜாக்கிரதை' என்று இவர் சொல்ல, 'அப்படியானால் தொலை; உன்னையும் ஒரு படம் பிடித்துத் தொலைக்கிறேன்' என்று எடுத்து அது பத்திரிகையிலே வருகிறதே அது அல்ல உழைப்பின் பெருமை!

—அறிஞர் அண்ணா.

# அர்த்தமில்லாமல் அடுக்காதீர்கள்-
# பேனாவால் காகிதத்தில் குத்தாதீர்கள்!

ம் சாரம்! "இதுவென்ன சாரம்—அமைச்சர் செய்ய மா இப்படி சொற்சோரம்" எனக் கேட்க, சர்க்கார்பால் ர்க்கரையும் பாலும் போல் ழகுகின்ற கலைத்துறைநண்பர் ளுக்கே உணர்ச்சி ஏற்பட ல்லை!

அடுக்குச் சொல் மட்டுமே மக்குப் பேசத் தெரியும் எனத் டுக்குச்சொல் உதிர்த்தவர்கள் னைவருமே முதல் சட்டமன் க் கூட்டத்திற்குப் பிறகு, டுக்குச் சொல்லும் பேசவும் தரியும்; அதோடு அரசுக்கு வண்டிய ஆய்வுரைகளை எடுத் யம்பவும் தெரியும் எனக்கண் .னர்; நம்மனோர் களிகொண் .னர்.

சட்டமன்றத்தில் அண்ணு ழகுற எடுத்துரைத்தார்— டக்கு வாழ்கிறது; தெற்கு தய்கிறது என்பது வெறும் டுக்குச்சொல் அல்ல; அழகுச் சொல்லாக மாத்திரம் இருந் ால் அனைவருமே அதை மன ில் பதியவைத்து உச்சரித்துக் கொண்டிருக்க மாட்டார்கள். உண்மையின் படப் பிடிப்பு அந்த வாசகத்திலே அமைந் துள்ள காரணத்தால்தான் வலுப்பெற்று முழங்குகிறது ன்ற கருத்துப்பட!

உண்மைதானே நண்பா! 'மானம் பொழியுது; பூமி விளை யுது—மன்னவன் காணிக்கை ஏதுக்கடா?" எனக் கேட்கி ருன்; வரலாற்றிலும் நாடகத் திலும் வருகிற கட்டபொம் மன்! அதை எப்போதோ படித் தோம்—அந்தக் கூத்தை என்றோ ஒரு நாள் கண்டோம்; ஆனு லும் இன்னும் அந்த வரிகளை மறக்க முடியவில்லையே, ஏன்?

வெறும் அடுக்குச் சொல் மட் டுமா, அதிலே இருக்கிறது? வீரமல்லவா விளையாடுகிறது— விடுதலை உணர்ச்சியல்லவா கொடிகட்டிப் பறக்கிறது!

மறந்திட முடியவில்லை அந்த முச்சிமிகு வரிகளை! உண்மை, உணர்ச்சியோடும் அதற்குரிய எழிலோடும் வெளிவரும்போது உள்ளத்தில் ஆழப்பதிந்துதான் விடுகிறது.

"வேதனைப்படுகிறேம்; வெட் கப்படுகிறேம்; விரட்டப்படு கிறேம்!" அடுக்குக் கோர்வை தான்! 1949-ம் ஆண்டு "திரா விட நாட்"டில் அண்ணு தந்த தலைப்பு! இன்றைக்கும் திரா விடர் இயக்கத்தில் ஏற்பட்ட ஒரு மாபெரும் கொந்தளிப்புக் கான நிகழ்ச்சியை அது நமக்கு நினை ஊட்டிக் கொண்டிருக் கிறதே! அடுக்குச் சொல் மட் டுமா—அந்தக் கருத்துக்கு நிறை வுகளைக் கொடுத்திருக்கிறது? அல்ல; அல்ல—அதிலே பொதிந்து கிடக்கும் வேதனை நிறைந்த உண்மையுங்கூட!

அந்த வேதனையான உண்மை, அதற்குரிய சொல் அழகோடு வெளிப்படும்போது சாகாத தன்மை பெற்று விடுகிறது!

அடுக்கு மொழி பற்றிப் பழித்து எழுதுகிறதே; தின மணிக் கதிர்—நீ. சில காலமாக அந்தத் தினமணி போன்ற ஏடுகளை கவனித்தால், அவர் களும் அடுக்குச் சொல்லால் கவரப்பட்டு, அழகுச் சொற் களைத் தேடி அலைகிற விந்தை புலனுகும்!

ஒரு ஏட்டில் செய்தி கண் டேன்; "அறுபது சேலைகளை அணிந்திருந்த ஆரணங்கு அகப் பட்டாள்!" என்ற தலைப்போடு அந்தச் சேதி வெளியாகியிருந் தது! அடுக்கு மொழி பற்றிக் கேலி புரியும் தினமணி அடுக் குச் சொல்லைத் தேடி அலைந்து இறுதியில் ஆப்பசைத்த குரங்கு போல் அகப்பட்டுக் கொண்ட ஒரு தகவலை உனக்குக் குறிப் பிட வில்லையே; இதுவரையில்!

காஞ்சியில் சர்வோதய மாநாடு நடந்தது அல்லவா; வினேபா போன்ற பெரு மேதைகள் எல்லாம் வந்திருந் தார்களே; அப்போது மாநாடு பற்றிய சேதிகளைப் பக்கம் பக்கமாக தினமணி வெளியிட் டது! சர்வோதயத்திற்காக அமைந்திருந்த பந்தலும், குடில் கள் போன்ற இருப்பிடங் களும் மிக்க எளிய முறையில் எழிலோடு அமைக்கப்பட்டிருந் ததை தினமணி வர்ணிக்க விரும்புகிறது! எப்படித் தெரி யுமா? இயற்கையையே மிஞ் சக்கூடிய விதத்தில் மாநாட்டு அமைப்புகள் இருந்தன; அல் லது இயற்கையே அதிசயப் படும்படியாக மாநாட்டுப் பந் தல் முதலியவை அமைக்கப் டன—என்று எழுத நினைக் கிறது!

ஆனால் பாவம்; அப்போது அடுக்குச் சொல் ஆசை பிறக் கிறது அதற்கு!

காஞ்சி சர்வோதய மாநாடு
இயற்கை எள்ளிநகையாடியது!

புரிகிறதா பொன்முடி! சிரிக் கிருயா; நன்ருகச்சிரி! சிரிக்கா மல் என்ன செய்வது?... மாநாட்டு அழகை(?)க் கண்டு இயற்கையே கேலி செய்து சிரித்தது என்று தினமணி கூறும்போது நீயும் நானும் சிரிக்காமல் என்ன செய்வது? இயற்கை எள்ளி நகையாடிய தாம்! தினமணி எழுதுகிறது அது கூறுகிறது; நாம் அடுக்குச் சொல் அழகர்கள் என்று!

அழகாகத் தமிழ் எழுதுவ தும் பேசுவதும் ஒரு குற்றமா?

செய்யத்தகாத பாபமா?... அந்தோ பரிதாபத்திற்குரிய தமிழகமே! உன் அறிவு இவ் வாறு எங்கனமாயிற்று?—என ஏங்குகிறது உள்ளம்!

"நாநலம் என்னும்
நலனுடைமை அந்நலம்
யாநலத்து உள்ளதூ
உம் அன்று."

என வள்ளுவர் குறள் யாத்தி ருக்கிருர்.

நாவன்மை ஒருவகைச் செல்வ மாகும்; அது தனிச் சிறப்பு டைய நலமே தவிர எந்த நலத் திலும் அடங்குவது அல்ல— என்று வள்ளுவப் பெருந்தகை கூறுகிருர்.

"சொலல் வல்லன் சோர்விலன்
அஞ்சான் அவனை
இகல் வெல்லல்
யார்க்கும் அரிது"

"கேட்டார்ப் பிணிக்குந்
தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்"

"விரைந்து தொழில் கேட்கும்
ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்"

எண்ணங்களை ஒழுங்காகக் கோர்த்து இனிமையாகச் சொல்லும் திறனுடையவரைப் பெற்ருல், உலகம் விரைந்து அவர்களுடைய ஏவலைக் கேட்டு நடக்கும் என்ற பொருளே இந்தக் குறளுக்கு! தமிழ் என்ருலே இனிமை எனப் பொருள் கூறுவர்; அந் தத் தமிழை இனிமையோடு கையாளக் கூடாது என ஒரு சாரார் கங்கணம் கட்டித் திரி கிருர்களே, ஏன்?

இந்தக் கேள்விக்கு ஒரே பதில்: மலடி, மற்ற பெண் களுக்குக் கர்ப்பத்தடை உப தேசம் செய்வதுபோல் என்பது தான்!

பாரதக் கதையில் ஒரு நம்பத் தகாத கற்பனையுண்டு! குந்தி தேவிக்குக் குழந்தை பிறந்த தும் காந்தாரி குழவியை எடுத்து வயிற்றில் குத்திக் கொண்டாளாம்! அவளும் கர்ப் பமாகத்தானிருந்தாள், ஆனல் பொருமையின் வேகம் அம்மிக் குழவியால் அடிவயிறு தாக்கப் பட்டது! அந்த எரிச்சலால் ஏற்பட்ட செயல்—அவசரத் தின் விளைவு—அவள் வயிற்றில் உள்ள கரு சிதைந்து உதிரமாக வெளிவந்து விட்டதாம்! பிறகு முனிவர் அருளால் உதிரம் குழந்தைகளாக மாறி நூறு மக்கள் தோன்றி, ஒரே மக னுக்கு வரவேண்டிய பலம் நூறு பேருக்கு சிதறி; பாரதப் போரில் மாண்டு விட்டார் களாம்!

அதைப் போலத்தான்பொன் முடி; அடுக்குச்சொல், அழகு தமிழ், நம்மவர்கள் பேச்சிலும் எழுத்திலும் சரளமாகப் பொழிந்திடுவதைக் கண்டு காந் தாரி நிலையிலுள்ளோர் குழ வியை எடுத்து (அல்ல: அல்ல- பேனாவை எடுத்து—வயிற்றில் அல்ல: தாளில்) குத்திக் கொள் கிறார்கள். அந்த அடுக்குமொழி களோ: காந்தாரியின் சிதைந்த கர்ப்பம்போல பொலிவற்று, வலிவற்றுப் போய் விடுகின் றன.

நீ கூட படித்திருப்பாய்; சட்டமன்ற நடவடிக்கைகளை!

தேனிக் காங்கிரஸ் உறுப் பினர் உனக்குத்தான் தெரி யுமே; தியாகராசன் என்னும் திருப் பெயருடையார்—கடவுள் பெயரால் பிரமாணம் எடுத் துக் கொண்டால், தவறு செய் தால் ஆண்டவனின் தண்டனை கிடைக்குமோ என உண்மை யாக நம்பிப் பயந்தோ என் னவோ; மகாத்மா காந்தியின் பெயரால் பிரமாணம் எடுத்து காந்தி தலையில் பழிபோட எண்ணிய பாரத புத்திரர்!

அவர் அடுக்கு மொழியில் தி. மு. கழகத்தாரை வெற்றி கொண்டதாக எண்ணிக் கொண்டு, நிதி மந்திரி தொகுதி யில் குண்டா திட்டம்—என் தொகுதியில் அண்டா திட்டம் தேவை! சத்யவாணி தொகுதி யில் 'கோச்' ப்ராக்டரி! என் தொகுதிக்கு 'மேட்ச்' பாக்டரி தேவை! என்றெல்லாம் சொற் களை வாரியிறைத்தார்!

❋ 9-ம் பக்கம் பார்க்க,

---

*தலைமைக் கழகம்—அறிக்கை எண் : 6—57*

## கழகத் தோழர்களுக்கு


★

சென்னை நகரிலும், பிற மாவட்டங்களிலும் விஷக் காய்ச்சல் நோய் பெருவாரியாகப் பரவிப் பலரையும் பாதித் துக்கொண்டு வருவதால், இன்னும் ஒரு திங்களுக்கு, முன் னரே ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டங்கள் தவிர, மற்ற கூட் டங்களுக்கு ஏற்பாடு செய்ய வேண்டாம் என்றும், நோய் பரவவொட்டாமல் தடுப்பதற்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்றும் ஆங்காங்குள்ள கழகத் தோழர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேம்.

12—6—57
'அறிவகம்'
சென்னை-13

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. க.

## புலியிருக்கப் பூனை வேட்டையா?




உத்தரப் பிரதேசத்தில் பந்தா என்ற இடத்திலுள்ள ஒரு தாலுக்கா ஆபீசில் ரிக்கார்டுகளை எலிகளிடமிருந்து காப்பாற்ற ஒரு பூனையை வளர்த்து வந்தார்கள். இப்போது காங்கிரஸ் கமிட்டியின் தீர்மானத்திற்கேற்ப செலவைச் சிக்கனம் செய்வதற்காக அந்தப் பூனையை விரட்டிவிட்டார்களாம்!

—('சங்கர்ஸ் வீக்லி.')

# பூரணமாகிவிட்டதாம், திட்டம்; பிதற்றுகிறார்கள், 'போலிகள்'!

பாரீர் எமது சாதனையை! பாரதம் முழுவதும் வானத்தை முட்டும் ஆலைகள்; பெரும் பெரும் அணைக்கட்டுகள்! எல்லாம் யார் சாதித்தவை? நாங்கள்—காங்கிரஸ்காரர்களாகிய நாங்கள்!

—தம்பட்டமடிக்கிறார்கள். தேசிய வீரர்கள்!

யாருடைய பணம் அது? யார் வீட்டு சொத்து அதற்கெல்லாம் காரணம்? காங்கிரஸ் கட்சி தொகை கொடுத்து நீங்கள் அந்த ஆலைகளையும், அணைக் கட்டுகளையும் கட்டினீர்களா?—என்று எதிர்த்துக் கேட்ட பேருக்கெல்லாம் அவர்கள் சரியான பதில் சொல்லாமல் தட்டிக் கழித்தார்கள்!

'திட்டங்கள் நிறைவேறக் காங்கிரசிற்கு ஓட்டளியுங்கள், —என்று மேடை போட்டு முழக்கினார்கள், தேர்தல் காலத்திலே!

காங்கிரஸ்காரர்கள் பதவிக்கு வந்ததால்தான் அந்தத் திட்டங்கள் யாவும் நிறைவேறும் என்கிற விதத்திலே மேடை போட்டுக் கொண்டு ஊருக்கு ஊர் முழக்கிக் காட்டினார்கள்!

உண்மையில் திட்டத்திற்குச் செலவாகும் தொகை யாருடையது? காங்கிரஸ்காரர்களுடைய சொந்தப் பணமா? அல்லது காங்கிரஸ் கட்சியின் பணமா?

இரண்டுமல்ல; பொதுமக்கள் தந்தது அவை! போதாதற்கு அரசாங்கத்தின் பெயரைச் சொல்லி—கட்சியின் பெயரைச் சொல்லியல்ல — வெளி நாடுகளிலே, உலக 'பாங்கி'யிலே—கடன் வாங்கியிருக்கிறார்கள்!

திட்டத்தைக் காங்கிரஸ்காரர்களால் மட்டும்தான் நிறைவேற்ற முடியும் என்பதல்ல! ஆட்சி பீடத்திற்கு யார் தேர்ந்தெடுத்து அனுப்பப்படுகிறார்களோ அவர்களது கடமைகளுள் ஒன்று நாட்டை வளமாக்குவது!

—ஆனால் இவற்றையெல்லாம், தேர்தல் காலத்திலே மறைத்து மறைத்துப் பேசினார்கள்!

இப்போதோ வரி விதிக்கும் போது அதற்கான மூலகாரணம் திட்டம் என்று பேசத் தலைப்பட்டிருக்கிறார்கள்!

—முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே ஆனையளவு சாதித்து விட்டோம்; இந்தியாவின் பொருளாதாரத்தை இமயம் அளவு உயர்த்திவிட்டோம்—என்றெல்லாம் பேசுகிறார்கள்!

பக்ரா நங்கல்; சித்தரஞ்சன்; சிந்திரி; பெரம்பூர்—முதலியவற்றைக் காட்டுகிறார்கள்!

அழகான முகப்பு வாயில் தான்! ஆனால் முகப்பைத் தாண்டி உள்ளே சென்றதும் இடிந்து, சரிந்து, இருண்டு கிடக்கும் மண்டபமாயிருந்தால்?

அதே போலத்தான் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் 'சாதனைகள்' காட்சியளிக்கின்றன!

வடக்கே ஆலை

தெற்கே பாலை

—என்பதை மட்டுமல்ல நாம் இங்கே குறிப்பிட விரும்புவது.

'மலம்மூடத்தான் மலர்பறித்தேன் என்றால் குளிர் மலர்ச் சோலை கோவென்று அழாதா?'—என்ற அழகிய வரியைப் போல ஊழல்களை மறைப்பதற்கும், வெளிநாட்டிலிருந்து இந்நாடு வந்துபோகும் உயர்தரப் பிரயாணிகளுக்கும், விருந்தினர்களுக்கும் காட்டுவதற்குத்தான் இங்கே முதலாவதாக ஆலைகளும் அணைக்கட்டுகளும் பயன்படுகின்றன — என்பதை அவர்களும் மறக்க முடியாது.

அதன் பின்னணியிலே திறமைக் குறைவு காரணமாகப் புதைந்து கிடக்கும் ஊழல்கள்; வஞ்சகப் பெருச்சாளிகள் வயிற்றிலே புகுந்துகொண்ட ரூபாய்கள்—இவைகள் தெரிவதில்லை, அந்த வெளிநாட்டுக் கௌரவப் பிரயாணிகட்கு!

முதல் ஐந்தாண்டுத் திட்டம் உண்மையிலேயே வெற்றி பெற்றிருக்கிறதா?

திட்டத்தில் வரையறுக்கப்பட்ட அனைத்தும் இப்போது செயல் வடிவிலே மாற்றப்பட்டிருக்கிறதா?

—அதுதான் இல்லை!

மொத்தம் திட்டமிடப்பட்டதில் 15 சத விகிதம்—அல்லது 360 கோடி ரூபாய்கள் இன்னும் செலவழிக்கப்படாமலேயே இருக்கின்றன!

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் செலவிடுவதற்குத் திட்டமிடப்பட்ட தொகை—2,354 கோடி.

ஆனால் உண்மையில் செலவழிக்கப்பட்டிருக்கிற தொகை 1988 கோடி.

—இதோ அந்த விபரங்கள்!

✻ 4-ம் பக்கம் பார்க்க

# 'காந்தாரிப் பண்பு!'

❊ 7-ம் பக்கத் தொடர்ச்சி

அடுக்குச் சொல் தவருன இடங்களில் சிக்கிக் கொள்ளும் போது எவ்வளவு அவலட்சண மாகி விடுகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டு!

மந்தி கையில் மலர் மாலை தரப்படலாமா? கூடாதல்லவா; அதுபோலவே சொல்லும் — எழுத்தும் என்பதை மாற்றுமுகாமிலிருந்து நம்மைத் தாக்குவோர் உணர்ந்திட வேண்டும்!

தேடிச் சென்று ஓடிப் பிடித்து ஒழுங்கற்ற சொற்களை அடுக்கிக் காட்டி ஜாலம் புரிவோரை நாம் என்றுமே ஏற்றுக் கொண்டதில்லை.

"அ"வுக்கு "அ"—"க"வுக்கு "க"—போடுகிற, போட்டுத்தீர வேண்டுமென்று எண்ணுகிற போக்கினரை எழுத்தாளர் வரிசையில் அமர நாம் இடமளித்ததில்லை.

எண்ணங்களை இழந்துவிட்டு, எழுத்தழகிலே மட்டும் இதயத்தைப் பறி கொடுப்பது ஆகாது என்பதே நமது நோக்கம்!

அடுக்கு மொழி, சின்னபின்னப் படுத்துவதற்கு இறுதியாக ஒரு உதாரணம் தருகிறேன் பார்! நாடக விளம்பரத்தாள் ஒன்று காணப் பெற்றேன். நாடகம் நடத்துவோர் என்னை மிக மதிப்பவர்களாகக் கூட இருக்கலாம்; அவர்கள் மனம் புண்படுவதற்காக அல்ல; பண்படுவதற்காகவே இதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஓமலூரில் நடத்தப் படும் நாடகம் — அதற்கான விளம்பரத்திலேயுள்ள வாசகங்கள் சில!

"வருக வருக என வரவேற்கிறோம்!"

பிழையில்லை — அழைப்பும், அதோடு அடுக்குச் சொல்லும் கலந்து இழைகிறது! அடுத்து படித்துப் பார்!

"ஏக்சமுறும் பொருப்பாளர்களின் விருப்பமான கருத்தோவியத்தை சிறப்பாக—சீராக்க செம்மல் தாய்—தமிழ் தரணி போற்றும் தகையோர்க்கு அழைப்பு!"

என்ன கருதுகிறாய் பொன்முடி! புரிகிறதா உனக்கு? அவர்கள் எழுதிய வாசகம் அப்படியே தரப்படுகிறது உனக்கு; திருத்தமேயின்றி! இன்னுமிருக்கிறது; பார்!

"ஏவிளம்பி வைகாசி, பௌர்ணமி புதனில், சீதள நிலவில், எட்டரை இருட்டில், பூரணக் கலாநிதியின் அலங்கார ஒளியில், தேரடித் திடலில், திறந்த வெளியில்!"

பௌர்ணமி புதன்! சீதள நிலவு! அதுவரையில் சரி; பிறகு எட்டரை இருட்டு எங்கிருந்து வந்தது? நில வொளியில் இருட்டு வருவானேன்? தி. மு. க. அடுக்குமொழிக்கு முன்னே, தினமணி அடுக்குமொழிபோல முடியவில்லை நண்பா, இன்னுமிருக்கிறது படி!

"இயல் இசை நாடகக் குழுவினர் அளிக்கும் பெருங்குடி—மக்கள் அள்ளி பருகும் சிந்தனை சற்சலம்! கற்பனை கல்லோலம்! காவிய கருவூலம்!

குழவி பேசும் மழலை! கரண்டம் காத்த பொய்கை

பங்சயம் ஈந்த கரந்தை! வால் வெள்ளி பேழை

கனலிவென்ற கனகம்!

சிந்தனை சுடரின் கற்பனை கதை!"


படித்தாயா? காந்தாரி வயிற்றுக் குழந்தைபோல அடுக்கு மொழி ஆவதை அனுமதிக்க முடியுமா? எண்ணிப்பார்!— இத்தகைய அடுக்கு மொழித் தமிழை அண்ணு, சட்ட மன்றத்திலும் — சம்பத், லோக்சபாவிலும் பேச வேண்டுமென்று துடிப்பது போலக் கருதி, 'பேசுவதானால் அடுக்கு மொழியில் பேசக்கூடாது" என்று தினமணிக் கதிர் நகைச் சுவைச் சுடரை உதிர்க்கிறது!

தமிழின் அழகு தவருன இடங்களில் சிக்குவதால் அலங்கோலமாகிறது என்ற உண்மை நாட்டுக்குத் தெரியாமல் இல்லை; அதே சமயம், அழகுத் தமிழை இன்பத் தமிழை வளர்த்து வருபவர்கள் தி. மு. கழகத்தார்தான் என்ற பாராட்டும் நல்லவர்களிடமிருந்து நமக்குக் கிடைக்காமல் இல்லை!...

நீகூட சென்ற தடவை மடலில் அடுக்கு மொழிகளைத் தேடிப் பிடித்துப் போட்டிருந்தாய்! அலைந்து திரிந்து தேடாதே! எண்ணங்களைத் தங்கு தடையின்றி எழுது— எழில் தானேவந்து அமைந்து கொள்ளும்! எழிலை முன் வைத்து எண்ணத்தை இழந்து விடக்கூடாது-இதை அறிவுரையாகக் கருதாமல் அன்புரையாகக் கருதி, தமிழ் வளர்க்கும் நமது கழகத்தின் பெருமைக்கு ஊறு நேராவண்ணம் நடந்து கொள்! என் பாசமுள்ள நண்பனல்லவா நீ—எழிலும் எண்ணமும் சேரும்பொழுது புதுமை இருக்கத்தான் செய்கிறது!... ஆனால் தலைக்குக் குல்லாயே தவிர குல்லாய்க்குத் தலை அல்ல; என்பதை மறந்து விடக் கூடாதே—அப்படி மறந்து விடாத நம்மைப் பார்த்து "கதிர்" கேலி புரிகிறது தன்னுடைய "காந்தாரிப் பண்பை" மறந்து விட்டு!

"கதிர்" மட்டுமா?—என்கிருய்! புரிகிறது நீ யாரை நினைத்துக்கொள்கிருய் என்று! ...போகட்டும் பாவம், பொறுமைக் குணம் படைத்தவர்கள்!

அன்புள்ள,
நண்பன்.


## துப்பறியும் கதைகள்!

வடுவூராரும், ஆரணியாரும், அவர்களின் வகையராவினரும் ஏராளமான துப்பறியும் நாவல்களை மிகப் பெரிய புத்தகங்களாகத் தீட்டித் தந்துள்ளனர். ஆனல் இப்போதுள்ள மக்களின் மன நிலையில் அவ்வளவு பெரிய புத்தகங்களை விரும்பிப் படிக்கமாட்டார்களென்பதைக் கண்டறிந்து, சுருக்கமான அளவில் துப்பறியும் நாவல்களை ஏராளமாய் வெளியிட ஆரம்பித்து வெற்றி பெற்று வருகின்றனர். அவர்கள் செய்ததைப் போலவே மூல ஆசிரியர்களின் பெயரையும் இவர்களில் சிலர் குறிப்பிடுவதில்லை. பிரயாண அலுப்பு தெரியாமலிருக்கும்—இதுதான் துப்பறியும் கதைகளின் பயன்!

## மங்கள விலாஸ் மர்மம்

எழுதியது—'சேரன்'

மர்மம் நிறைந்த துப்பறியும் நாவல் வரிசையில் இடம் பெறும் இந்தக் கதையின் நடையில் புதுமையான சுவை யில்லாவிடினும், அடுக்கடுக்கான சம்பவங்களும் தொடர்ச்சி கெடாமல் வரும் சிக்கல்களும் படிப்பதற்கு ருசியளிக்கின்றன. கதையின் முடிவு கடைசி வரையில் எதிர்பாராத வகையில் மர்மமாகவே இருந்து வெளியாகிறது. ஆனல் கதையின் இறுதிக் கட்டத்தில் சிக்கல்களெல்லாம் விடுவிக்கப்படும்போது, சில அவிழ்க்கப்படவேயில்லை. அவர் ஏன் அப்படி நடந்தார்? இந்தச் சம்பவம் எதற்காக இப்படி நிகழ்ந்தது?—என்று பல கேள்விகள் எழும்பத்தான் செய்கின்றன.

விலை ரூ. 1-25

## வடிவாம்பாளின் உயில்

எழுதியது—'சிரஞ்சீவி'

சென்னையிலும் பர்மாவிலும் நடப்பதாகக் கதை. கதாபாத்திரங்கள் நமக்கு அறிமுகமானவர்கள் போலவும், நிகழ்ச்சிகள் ஏற்கனவே கேள்விப்பட்டன போலவும் உருவாக்கப்பட்டுள்ள முறை இயற்கையாயிருக்கிறது. மர்மப் பின்னல்கள் திணிக்கப்பட்டு இல்லை. கதைப் போக்கில் நல்லதொரு தெளிவு; நடையில் சரளமான ஒரு ஓட்டம்; இறுதியில் சிக்கல்களை விடுவிப்பதில் ஒரு விளக்கம்—எனவே எல்லோருக்கும் விரும்பிப் படிப்பதற்கான சகல அம்சங்களையும் புகுத்தியிருக்கிறார் கதாசிரியர்.

விலை ரூ. 1-50

## மலை வீட்டு மங்கை

எழுதியது—'சந்திரமோகன்'

உள்ளப் போராட்டங்களை விவரிக்கும் உணர்ச்சி மயமான இந்தப் புகழ் பெற்ற பெருங் கதையை ஏன்தான் துப்பறியும் நாவல் வரிசையில் சேர்த்தார்களோ தெரியவில்லை. 'ரெபக்கா' என்ற பெருங்கதையின் தமிழ் வார்ப்படமாயிருந்தும் இதில் மூலத்தைப் பற்றி எதுவுமே குறிப்பிடப்படவில்லை. தழுவி எழுதுவதை ஏதோ குற்றமாகக் கருதிக் கொண்டு பலர் மூலாசிரியரை இருட்டடிப்புசெய்து விடுகின்றனர்.

செத்தும் சாகாமல் ஆட்சி புரியும் மாஜி கதா நாயகியைத் தாம் கொன்ற விதத்தையும் அவசியத்தையும் தமது தற்கால கதாநாயகிக்குக் கதா நாயகர் விளக்கிக் கூறும்போதுதான் ஒரு மர்மம் வெளியாகிறது. அது தவிர, மற்றபடி இது முதலிரண்டு கதைகளைப் போல் சம்பவக் கோர்வையாக இராமல் வர்ணனைக் குவியலாய்த் திகழ்கிறது. சுவை ததும்ப, உத்வேகமுள்ள நடையில் கதை சொல்லிச் செல்லும் வகை நன்ருக அமைந்திருக்கிறது.

விலை ரூ. 1—50.

இந்த மூன்று புத்தகங்களையும் வெளியிட்டோர்:

பிரேமா பிரசுராலயம், சென்னை—24.

# கஜானாப் பணம் 'கொள்ளை'; இராணுவத்தினருக்கு என்ன வேலை?

❊ 5-ம் பக்கத் தொடர்ச்சி

ருத்தான் 'மட்டி'யில் இருந்தார்களோ என்னவோ தெரியவில்லை)

இத்தனை ஆயிரம் போலீஸ்காரர்களைத் தவிர 'சேவாதளம்' போன்ற காங்கிரஸ் சார்புடைய ஸ்தாபனங்கள் தங்களது தொண்டர்களைப் போதுக்கூட்டத்திற்கு அனுப்பியிருந்தது. அவர்களது மொத்த எண்ணிக்கையோ 3,000!

இது தவிர 'ஹோம் கார்டு' போன்ற படையினைச் சேர்ந்தவர்கள் போலிசுக்கு உதவியாக இருந்தார்சள். அவர்களது எண்ணிக்கை 750!

பிரதமர் கலந்து கோள்கிற கூட்டம் பிரமாதமாக இருக்க வேண்டாமா?

அதற்காக பூனாவிலுள்ள அத்தனை இராணுவத்தினரையும், சாதாரண சிவிலியின் உடையிற் சென்று போதுக் கூட்டத்தில் கலந்தகொள்ள வேண்டுமென்று மேலதிகாரிசள் உத்தரவிட்டிருந்தார்கள்! அந்த இராணுவத்தினரில் மனைவி மக்களோடு வாழ்பவர்கள் குடும்பத்தோடு போதுக் கூட்டத்திற்குச் செல்ல வேண்டுமென்றும் உத்தரவில் குறிப்பிடப் பட்டிருந்தது!

—இதற்காக இராணுவ லாரிகள் உபயோகப்படுத்தப்பட்டன!

ஆகமொத்தம் பண்டித நேரு கலந்துகோண்ட அந்தப் போதுக் கூட்டத்திற்கு அரசாங்கம் செலவழித்த மொத்தத் தொகையின் கணக்கு விபரத்தைக் கவனியுங்கள்:

—இதன் மூலம் இரண்டு உண்மைகள் விளங்குகின்றன: ஒன்று, மந்திரிகள் கலந்து கொள்கிற கூட்டத்தில் அரசாங்கம் எவ்வளவு தொகையை வீணாக்குகிறது—என்பது!

இரண்டாவது அவர்கள் கலந்து கொள்கிற பொதுக் கூட்டங்கள் எப்படிப் பெரிதாகத் தெரிகின்றன என்பது! ஏனெனில் 'மப்டி' உடையில் போலிஸ்காரர்களும், சிவிலியன் உடைகளில் இருக்கும் இராணுவத்தாரும், அவர்களது குடும்பத்தவர்களும் சேர்ந்தல்லவா பண்டித நேரு போன்றவர்களின் கூட்டத்தைப் பெரிதாகக் காட்டுகிறார்கள்!

—இதில் இன்னொரு உண்மையையும் மறந்துவிடக் கூடாது.

அன்று பூனாவில் பண்டிதர் கலந்துகொண்டது மகாராஷ்டிரப் பிரதேசக் காங்கிரஸ் கமிட்டி நடத்திய கட்சிக் கூட்டம்!

அந்தக் கூட்டத்திற்குத்தான் அரசாங்கக் கஜானாவிலிருந்து ஒரு இலட்சத்து மூவாயிரம் ரூபாய்கள் செலவழிந்திருக்கின்றன!

இது ஒரு கூட்டத்திற்கு ஆன தொகை!

ஆனால் சென்ற ஆண்டு பண்டிதர் கலந்துகொண்ட கூட்டங்கள் எத்தனை? கடிகாரத்தின் வினாடி முள்ளைப் போல அவர் டில்லியில் தரிக்காமல் வாரந்தோறும் சுற்றிக் கொண்டே இருந்திருக்கிறார்! அப்படியானால்; ஒவ்வொரு கூட்டத்திற்கும் உத்தேசமாக ஒரு லட்சம் ரூபாய் செலவானால் மொத்தம் எத்தனைகோடி ரூபாய்கள் இது நாள் வரை பண்டித நேருவினால் வீணாக்கப் பட்டிருக்க வேண்டும்?

| | |
|---|---|
| விழாவில் கலந்துகொண்ட 5000 போலீஸ்காரர்கள் (குறைந்த மதிப்பீட்டை வைத்தே கணக்கிடப்படுகிறது) பஸ், கார், ரயில் மூலம் பூனாவிற்கு வந்ததற்குத் தரப்பட்ட பிரயாணப் படியும் தினப் படியும்: | ரூ. 75,000 |
| ஒவ்வொருவருக்கும் ரூபாய் 500 வீதம் மத்திய அரசாங்கத்திலிருந்தும் மாநில அரசாங்கங்களிலிருந்தும் கூட்டத்தில் பங்கேற்ற உயர்ந்த அதிகாரிகளுக்குத் தரப்பட்ட பிரயாணப்படியும்; தினப் படியும்: | ரூ. 15 500 |
| 125 அரசாங்கக் கார்களுக்கு, தினமொன்றுக்கு 10 காலன் பெட்ரோல் வீதம் 4 நாட்களுக்கு ஆன் மொத்த செலவு: | ரூ. 12,500 |
| ஆக மொத்தம் | ரூ. 103 000 |

இவ்வளவு ஆர்ப்பாட்டத்துடன் போதுக் கூட்டம் நடத்தினார்களே; அதைக் கேட்க வந்தவர்களின் தொகை எவ்வளவு இருக்குமென்று நினைக்கிறீர்கள்?

பூனா போலீஸ் ரிப்போர்ட்டின் படி அந்தக் கூட்டத்தில் சுமார் 21,000 (இருபத்தி ஓராயிரம்) பேர்தான் இருந்திருக்கின்றனர்! இந்த எண்ணிக்கை மேற் குறிப்பிட்டவர்களையும் சேர்த்தது தான்!

—இவ்வளவையும் இத்தனையாண்டுகள் செய்து விட்டுத்தான் இப்போது பண்டிதரும்; அவரது பக்க வாத்தியங்களும் இன்று "சிக்கனம்! சிக்கனம்!!" என்றி கூக்குரல் எழுப்புகிறார்கள்!

★★★ உவமை யொன்று சொல்லுவார்கள்: ஒட்டகத்தின்மீது மலையத்தனை பாரங்களைச் சுமத்திய பின்னர்; அது எழுந்திருக்காவிட்டால் உடனே அதன் கண்ணிற்குத் தெரிகிறபடி சிறு துரும்பு ஒன்றை அகற்றி விடுவார்களாம்! உடனே ஒட்டகம் பளுவெல்லாம் அகற்றப்பட்டது என்கிற நினைப்பில்; மகிழ்ச்சியோடு எழுந்து நிற்குமாம்!

★★★ அதே கதைதான் இப்போதும்! சிக்கனம்; சிக்கனம் என்று இவர்கள் வெளிக்குத் தெரிகிற சில செலவுகளைக் குறைப்பது பொது மக்களை முட்டாள் ஒட்டகமென்று கருதிக் கொண்டு அதன் கழுத்தை ஒடிக்கிற சுமையிலிருந்து சிறு துரும்பை நீக்குவதாகத் தான் இருக்க முடியும்!

❊❊❊ அது மட்டுமின்றி: அவர்கள் துணிவுடன் பகிரங்கமாக "நாங்கள் முன்பு ஆடம்பரமாகத்தான் வாழ்ந்தோம்" என்று ஒப்புக் கொள்வது நாம் முன்பு குறிப்பிட்டதைப்போல மக்கள் மன்றத்தில் அவர்கள் தாங்கள் செய்த குற்றங்களில் ஒன்றை மட்டும் ஒப்புக் கொண்டு, 'அப்ரூவ'ராக மாறி அதன் மூலம் மககளது கொடுமையான தண்டனையிலிருந்து தப்பிப்பதற்கு செய்யப்படும் குயுக்தி வழியேயன்றிவேறல்ல!

●●●

## ஈழத்தில் . . .

❊ 11-ம் பக்கத் தொடர்ச்சி

லாம் சிறுபான்மையினர்என்று கருதப்படுபவர்கள் அனேகமாக இருபது சத விகிதத்துக்கு உட்பட்டோரே. பின்லந்து தேசத்தில் 9 சதவிகிதமானோர் சுவீடிஸ் பேசுகின்றனர்; ஆனால் அங்கு பீனிஸும், சுவீடிஸும் சம உரிமை அனுபவிக்கின்றன. கனடாவில் பிரெஞ்சு மொழி பேசுவோர் 25 சத விகிதமானோரே யாவர். ஆனால் ஆங்கிலமும் பிரெஞ்சும் கனடாவின் அரசாங்க மொழிகள்!

உலகில் எந்தப் பாகத்திலும் மொழிக் கொள்கை இத்தனை நீதியுடன் கவனிக்கப்பட்டு வரும் இக்காலத்தில் இலங்கையில் மட்டும் இக் கண்மூடித்தனமும் சர்வாதிகாரப் போக்கும் ஏன்? ஒரு நாட்டில் சிறுபான்மையோர் அரசியற் பாதுகாப்புக் கோருவது இயற்கை; ஆனால் இலங்கையிலோ பெரும்பான்மையோர் முந்திக் கொண்டு ஓடுவதும், மற்றவர்கள் உரிமைகளைப் பறித்து அநாதைகளாக்குவதுமேன்? ஆகவே தமிழர் கோரிக்கையில் உள்ள நியாயத்தினை உலகறியச் செய்தல் வேண்டும்!

●●●


'முரசொலி' விற்பனையாளர்களுக்கு!

★★ மே மாதப் பட்டியல் தொகையை 25-6-57-க்குள் அனுப்பி வைக்காத ஏஜண்டுகளுக்கு அடுத்த வார 'முரசொலி' இதழ் கண்டிப்பாய் அனுப்பப்படமாட்டாது - என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

-நிர்வாகி

'வெள்ளி வீதி'

1—7—57 இதழில்

மு. கருணாநிதியின்

"என்னைப் பற்றி"

★

'பஜாவ்' பானுமதி!

(கலைத் தம்பியின் கடிதம்)

விசித்திரப் பிறவிகள்!

நட்சத்திரப் பேட்டி!

இன்னும் பல பகுதிகள்

12, பி: ராமாநுஜம் செட்டித் தெரு; நுங்கம்பாக்கம்; சென்னை—6

# ஈழத்தில் மொழி வெறியர்கள்!

> மொழி வெறியர்கள் இங்கு மட்டுமல்ல; ஈழத்திலும் இருக்கிறார்கள். அவர்களது கொடுமைகளைத் தாங்கமாட்டாது இப்போது செந்தமிழர் கிளர்ச்சியின் துணை நாடவும் துவங்கி விட்டனர். ஆகஸ்ட் மாதத்தில் அந்த அறப்போராட்டம் ஆரம்பமாக இருக்கிறது.
>
> தென்னிலங்கைத் தீவின் மொழிப்பிரச்னையை விவரமாகச் சித்தரிக்கிறது. யாழ்பாணத்திலிருந்து வெளிவரும் "ஈழகேசரி" ஏட்டில் திரு கலைநாதன் எழுதியிருக்கும் இந்தக் கட்டுரையின் சில பகுதிகள்!

இன்று இலங்கை அரசியலில் முக்கியத்துவம் வகிக்கும் சிக்கலாக இருப்பது மொழிக் கொள்கைதான். முதலமைச்சரும் அவருடைய துணைவர்களும் மொழிச் சிக்கல் தீர்ந்து விட்டது என்று சொல்லும் நிலையிலிருந்தாலும் உண்மை அதுவன்று; ஒரு சின்னஞ்சிறு தீவில் வாழும் இரண்டு இனத்தவர்களிடையே வெறுப்பையும் துவேஷத்தையும் உண்டு பண்ணியிருக்கிறது. சென்ற ஆண்டு நிறைவேற்றப் பெற்ற ஒரு மொழித் தீர்மானம், பல காலமாக அனுபவித்து வந்த சீவாதார உரிமையை மறந்து மற்றொரு இனத்தின் ஆதிக்க வெறிக்கு அஞ்சி, அது ஏற்படுத்தும் சட்டங்களை அமைதியுடன் ஏற்றுக் கொள்ளுமென ஆளும்கட்சி வெறுமனே பெரும்பான்மைப் பலத்தினால் எண்ணுமானால், அது அதனுடைய மடமையைத்தான் வெளிப்படுத்தும்!

"சிங்களம் மட்டும்"-திட்டம் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் பட்டதிலிருந்து பாராளுமன்றத்திற்குள்ளும், வெளியே நாட்டின் பல பாகங்களிலும் நடைபெற்ற காரசாரமான விவாதங்கள் நிலைமையை நன்கு எடுத்துக்காட்டின. அமைதி கடுகளவும் இல்லாமற் போய் விட்டது. வகுப்புவாதக் கிளர்ச்சிகள் சர்வசாதாரணமாகிவிட்டன. சிறுபான்மை மக்கள் தாங்கள் அடக்கி ஒடுக்கப்படுகிறார்கள் என்ற ஏக்கம்—பெரும்பான்மை இனத்தவர்கள் இச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி நாடு முழுவதும் தமது ஏகபோக உரிமையை நிலைநாட்டுவோம் என்ற பேராசை—ஆகிய இரண்டிற்குமிடையில் பலத்த போராட்டம் நடைபெறுகிறது.

1956 ஜூன் மாதம் 5-ஆம் தேதி பாராளுமன்றத்தில் 'தனிச் சிங்கள' சட்டம் நிறைவேறியது. நெடுங் காலம் நிலவிவந்த இன ஒற்றுமைக்கும் அமைதிக்கும் முடிவு தேடிய தீர்மானம் இது. கிழக்கு மாகாணத்திலும் கொழும்பிலும் வகுப்புக் கலவரங்கள் உச்ச நிலையை அடைந்தன. இவற்றால் சிறுபான்மை இனத்தவர் அனுபவித்த தொல்லைகளும் அடைந்த சேதங்களும் கொஞ்சமல்ல. பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களின் ஆவேசமும் கண்ணியமற்ற போக்கும் ஏழைத் தமிழரைத் துன்பக் கடலுள் ஆழ்த்தியது. ஒரு மொழிக் கொள்கை சட்டசபை அங்கீகாரம் பெற்ற நாளிலிருந்து இலங்கையில் தமிழர் அனுபவிக்கும் இன்னல்கள் வளர்ந்ததோடு, அவர்களை இரண்டாந்தரக் குடிகளாகக் கருதும் நிலையும் ஏற்பட்டுள்ளதெனலாம்.

## அரசாங்கத்தின் பங்கு என்ன?

இலங்கையில் தமிழர் உரிமைகள் ஒடுக்கப்படவும், வகுப்புவாதக் கிளர்ச்சிகள் தோன்றவும் காரணமாய் இருந்தவர்கள் சிங்களப் பொது மக்கள் அன்று. அவர்கள் நெடுங்காலம் மற்றை இனத்தவர்களுடன் ஒருங்கிணைந்து வாழ்ந்துவிட்ட காரணத்தால் எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் இன ஒற்றுமையையும் அமைதியையும் பெற விரும்புகின்றனர். ஆனால் ஒரு சில மொழி வெறியாகள் இதற்குத் தடையாக இருக்கின்றனர்.

இலங்கையின் முதலாவது முதலமைச்சர் திரு. டி. எஸ். சேன நாயகாவின் அமைச்சரவையிலிருந்து பிரிந்த நாளிலிருந்து சிங்களம் மட்டும் கொள்கையில் தீவிர வாதியாக இருந்தார் திரு. பண்டாரா நாயகா. ஆனால் அப்பொழுதெல்லாம் நடுவு நிலைமையுடன் நடந்துவந்த ஐக்கிய தேசியக்கட்சி தேர்தலுக்குமுன் பயங்கர விஷப் பரீட்சையில் இறங்கியது. அதாவது, களனி மகாநாட்டில் பல தமிழ் அங்கத்தவர்களுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்து சிங்களமே இலங்கையின் ஆட்சிமொழியெனப் பிரகடனப் படுத்தியது ஐக்கிய தேசியக் கட்சி.

நாளடைவில் இக்கட்சியின் மேல் துவேஷம் கொண்டவர்கள் ஒன்றுபட்டு எதிர் பிரச்சாரம் செய்தார்கள். ஐக்கியதேசியக் கட்சியை முறியடிக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்ட 'மக்கள் முன்னணி' என்ற கூட்டுக்கட்சி பதவிக்கு வந்தது. கட்சிக்குக் கட்சிமாறி அரசியல் தகிடுதத்தங்கள் புரிந்தவர்கள் அதில் அங்கம் வகிக்கின்றார்கள். நாட்டின் சுபீட்சத்தினைக் காட்டிலும் தமது சொந்த நலனை மேலாக மதிப்பவர் நிறைந்த கட்சி அது. கருத்தில், வாழ்வில் இரு வேறு துருவங்களில் நின்றவர்கள் சந்தர்ப்பநிலைமையை ஒட்டிப்புதிய அமைச்சரவையில் ஒன்று கூடினர். சபைத் தலைவரான முதலமைச்சர் சாதாரணமாகவே எதிர்ப்பை விரும்பாதவர்; அதாவது அவர் பேச்சுக்கு மறு வார்த்தை கிளம்பாது! அவர் தமது நீண்டகாலக் கனவைப் பயங்கரமான சூழ் நிலையில் நிறைவேற்றினார். புதிய முதலமைச்சர் பண்டார நாயகா மனச்சாட்சிக்கு விரோதமாக நடந்து துரோகம் செய்யக் கூடாது என்று முழங்கினர்; ஆனால் அதன் பலன் இந்தப் புத்தஜெயந்தி ஆண்டில் நாட்டிற்குத் துரோகம் செய்யப் பட்டது!

## மொழிவழி மக்கள் தொகை

இலங்கையில் பெரும்பான்மை இனத்தவராக முறையே சிங்களர், தமிழர், முஸ்லீம்கள் ஆகியோர் வாழ்கின்றனர். மொத்த சனத்தொகையான 85 இலட்சத்தில் ஏறக்குறைய 65 விகிதமானோர் சிங்களம் பேசுகின்றனர். தமிழர் 28 சதவிகிதத்தினராவர். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு எடுத்த கணக்குப்படி ஏறக்குறைய 9 இலட்சம் இலங்கைத் தமிழர் வசிக்கின்றனர். இலங்கை இந்திய ஒப்பந்தத்தின்படி பதிவு செய்து கொள்ளப்போகும் இந்திய வம்சாவழியினர் 4 இலட்சம். மேலும் இலங்கையில் மொத்தமாக வாழுகின்ற முஸ்லீம்களில் பாதிக்கு மேற்பட்டோர், அதாவது இரண்டரை இலட்சம் முஸ்லீம்கள் தமிழ் பேசுகின்றனர். ஆக மொத்தம் 1952 கணக்குப்படி—பதினைந்தரை இலட்சம் தமிழ் பேசும் மக்கள் இலங்கையில் உள்ளனர்.

இச் சந்தர்ப்பத்தில் இலங்கை வாழ் முஸ்லிம்களின் மொழி பற்றி விரிவாக ஆராயவேண்டியிருக்கிறது. இவர்கள் பின்பற்றும் மொழி தமிழேயாகும். இவர்கள் பெரும்பான்மையாக வாழும் கரையோரப் பட்டினங்களான புத்தளம், சிலாபம், மட்டக் களப்பு ஆகிய இடங்களில் வழக்கில் இருப்பது தமிழே. ஆனால் சிங்களர் வாழும் பகுதிகளில் குடியேறியோர் சிங்களத்தைக் கற்றனர்; அதுவே நாளடைவில் அவர்களின் தாய்மொழியாயிற்று. ஆனால் சிங்களத்தில் இதுவரையில் முஸ்லீம் சமூகத்திற்கு உருப்படியான நன்மை ஏற்படவில்லை. (இப்பொழுது உத்தியோக வகைகளில் ஆசை காட்டப்படுவதாகச் செய்தி) அதற்குமாறாகத் தமிழைக் கற்றுப் பாண்டித்தியம் பெற்றவர்களும் கவிதை புனைபவர்களும் அந்த சமுகாயத்திற் பலர். அதிலும் கிழக்கிலங்கைத் தமிழெனின் அதில் இஸ்லாமிய கலாசாரம் மிளிரும்! விந்தை என்னவெனில் சிங்களமே முஸ்லிம்களின் மொழியென வீம்பு பேசும் சிங்கள மரக்காயர் போன்றவர்கள் இனிமேல்தான் திருக்குரானை சிங்களத்தில் மொழிபெயர்க்க வேண்டும். ஆனால் தமிழில் அவ்வேத நூல்பற்றி ஆராய்ச்சிகள் வெளிவரத் தொடங்கியே பல காலமாகி விட்டது.

## மொழிச் சமத்துவம் வேண்டும்!

இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் பதினைந்தரை இலட்சம்—இன்றைய கணக்குப்படி 25 இலட்சமாகப் பெருகியிருக்கலாம்—அவர்களையும் சிறுபான்மையினர் எனக்கூறி அவர்களுக்குரிய சீவாதார உரிமையைப் பறிப்பது அநீதியாகும். நாட்டின் விடுதலைக்காகப் போராடியும், சுபீட்சமே கண்ணாக நாளும் நாளும் பாடுபடும் ஒரு பகுதியினரைக் கீழ்நிலைக்குத் தள்ளுவது கொடுமை. நியாயமாக அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமையும் சலுகையும் மறுக்கப்படுவது மிகப் பெரிய அரசியல் வஞ்சனையாகும்.

ஒரு நாட்டின் மொத்த ஜனத் தொகையில் இருபத்தெட்டு சத விகிதமானவர்களைச் சிறுபான்மையோர் என இகழ்ந்து அவருக்குரித்தான நன்மைகளை மறுப்பதும் மறைப்பதும் சனநாயகத்தின் பாற்பட்டதன்று. இதனை சனநாயகம் என்பதைக் காட்டிலும் பெரும்பான்மையரான ஆளுவோரின் சர்வாதிகாரம் என்பதே பொருந்தும்; சிங்கள வகுப்பு வாதிகளின் பேராசைக்கு இலங்கைத் தமிழரின் உரிமை பறிபோகிறது.


## தமிழர் கோரிக்கையின் நியாயம்

இலங்கையின் மொழிச் சிக்கல் பற்றி சட்டர்ஜி அவர்கள் ஆராய்கையில். உலகிலுள்ள பல மொழி இராச்சியங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். சுவிட்சர்லாந்து தேசத்தில் நெடுங்காலமாக ஜெர்மன் மொழியே அரசகரும மொழியாக இருந்தும் அங்குள்ள மற்ற இனத்தவர்களின் கோரிக்கைக்கு இணங்கி 1848-ஆம் ஆண்டு மும்மொழிச் சமஷ்டி அரசியலை அமைத்தனர். அதே போன்று பெல்ஜிய தேசத்தில் பிரெஞ்சு மொழியே பல காலமாக அரசியல் மொழியாக இருந்தும்கூட பின்பு பிரெஞ்சு, பிளெமிஷ் ஆகிய இரண்டையும் அரசாங்க மொழிகளாக்கினர். தென் ஆபிரிக்காவில், ஆங்கிலம், டச்சு ஆகிய இரண்டில் எதைத் தேர்ந்தெடுப்பதுஎன்ற சிக்கலில் இரு மொழிகளையும் ஏற்றுக்கொண்டது. பாகிஸ்தானில் உருது—வங்காளம் ஆகிய இரண்டும் அரசகரும மொழிகள் இந்த நாடுகளிலெல்

10-ம் பக்கம் பார்க்க

எஸ். அய்யாச்சாமி, திருச்சி.

(?) ஓட்டல் எதிர்ப்புப் போராட்டத்தில் எத்தனை பேர் சிறை செல்வார்கள்?



இருபதாயிரம் "வெண்பொன் வீரர்கள்" சிறை செல்வார்கள். ஆனால் அப்படிச் சென்றவர்கள் திரும்பி வருவது என்னமோ சந்தேகந்தான்!

வாசுசி, கோடம்பாக்கம்.

(?) தமிழ்நாடு பெயர்ப் போராட்டத்திற்கு லோகியாவுடன் திராவிட முன்னேற்றக் கழகம் கூட்டுச் சேருவதென்றால் லோகியா கட்சியின் எல்லாத் திட்டங்களையும் தி. மு. கழகம் ஒத்துக் கொள்ள வேண்டுமென்று அவர்கள் கூறினால் என்ன செய்வீர்கள்?

கட்சிகள் கூட்டு சேர்ந்து ஒரு நல்ல காரியம் செய்வதிலோ, போராட்டத்திலோ ஈடுபடுவதென்றால் அவைகள் தங்களுடைய மூலக் கொள்கைகளை யெல்லாம் மூட்டை கட்டி மூலையில் போட்டு விட்டோ, அல்லது இன்னொரு கட்சியின் எல்லாத் திட்டங்களையும் அப்படியே ஏற்றுக் கொள்வதாக உறுதியளித்தோ கூட்டுச் சேர்வது என்பது சாத்யமுமல்ல; அரசியல் இலக்கண முணர்ந்தோர் கடைப் பிடிக்கும் வழியுமல்ல! பொதுவான காரியங்களுக்குக் கூட்டுச் சேர்வதில் அந்தந்தக் கட்சியும் எடுத்துக் கொள்ளும் காரியத்தைப்பற்றிய அளவில் அதனதன் கொள்கைகளை சந்திக்க வைத்து காரியம் வெற்றி பெறுவதற்கான பலத்தை உண்டாக்க முனைய வேண்டும். நீயணைக்கப் பேரகிறவர்கள் தெருவில் உள்ள பல வீடுகளைச் சேர்ந்தவர்களாயிருக்கலாம். "நாளையதினம் தேர்த் திருவிழாவுக்குப் போகிறேன்; அப்போது நீ என்னுடன் வருவதாயிருந்தால்தான் இப்போது என்னோடு தீயணைக்க வரலாம்" எனக் கூறுகிறவனை ஆபத்தை உணர்ந்தவன் என்றோ, தீயணைப்பதில் அக்கரை உள்ளவனென்றோ கூறிட முடியாதல்லவா? லோகியா கட்சியினர் தீயணைப்பதற்குத் தயாராகி விட்டார்களா இல்லையா என்பது இன்னும் தெரியவில்லை. அப்படிப் புறப்பட்ட பிறகு, தாங்கள் கூறுவது போல தங்கள் கட்சியின் திட்டங்களையெல்லாம் தி. மு. க. ஒப்பிடவேண்டும்; அப்போதுதான் சேர்ந்து போராட முடியும் என்பார்களேயானால் அந்தப் பேச்சில், தீயை உண்மையிலேயே அணைக்கும் எண்ணம் பின்னணியில் இல்லை என்பது தெளிவாகிவிடும்.

எஸ். பி. சந்திரசேகரன், மாதுங்கா, பம்பாய்.

(?) பம்பாய் தமிழ்ச் சங்கம் என்ற பெயரால் நடைபெறுகிற அமைப்பில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் கலந்து கொள்வதற்கான வாய்ப்பு அளிக்கப்படுவதில்லையே; ஏன்?

தமிழ்ச் சங்கம், தமிழ் எழுத்தாளர் சங்கம், தமிழ்ப் பத்திரிகையாளர் சங்கம்—என்கிற பல பெயர்களில் இயங்கி வருகிற அமைப்புக்கள் அத்தனையுமே நம்மவர்களையெல்லாம் தீண்டத் தகாதவர்கள் என எண்ணி நடந்து வருகின்றன. பம்பாய்ப் பகுதிகளில் தமிழர்கள் வதைபடுவதைக் கண்டும் அறிவு வரப் பெறாதவர்கள், அப்படிவதைபடும் தமிழர்களுக்காகப் போராடும் கழகமாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பால் அனுதாபம் காட்ட மறுக்கிறார்கள் என்பதே உண்மை நிலையாகும். புதிய நிலை உருவாக வேண்டும்; புத்தம் புது சமுதாயம் பூத்துக் குலுங்க வேண்டும், அதற்கெனப் பாடுபடுகிறவர்களை மதிக்க வேண்டும் என்ற உணர்ச்சி உல்லாச புரியிலே உப்பரிகை அமைத்துக்கொண்டு பொழுது போக்கிறவர்களுக்கெனவும், தேநீர் விருந்துகளுக்கெனவும், சங்கங்கள் நடத்துவோருக்கு ஏற்படுவது கடினம்தான்!

காத்தமுத்து, கருப்பட்டி, (மதுரை மாவட்டம்)

(?) சர்க்கரை அதிகம் உபயோகித்தால் நீர்ரோகம் வந்துவிடும்; அதனால்தான் சர்க்கரை வரி போட்டிருப்பதாகக் காமராசர் பேசியிருக்கிறாரே; அது நியாயம் தானே?

நியாயமென்றே வைத்துக் கொள்வோம். சர்க்கரையால் நீர் ரோகம் வந்து விடுமென்று காமராசர் பயப்படுவது உண்மையானால் தஞ்சை திருச்சி போன்ற மாவட்டங்களில் நெல் வயல்களை அழித்து விட்டு கரும்புத் தோட்டங்கள் பயிரிடவும், சர்க்கரை ஆலைகளை அதிகப் படுத்தவும் முயற்சிகள் தீவிரமாக நடைபெறுகிறதே; அதை முதலில் அவர் தடுத்திருக்க வேண்டுமே!

வி. கே. நந்தகோபால், சித்தூர்.

(?) கக்கன்கூட தி. மு. க. வைத் தாக்குகிறாராமே... 'ரோமாபுரி ராணிகள்' புத்தகத்தைக் கேலி செய்தாராமே?

ஆமாம்: கேள்விப்பட்டேன். "ரோமாபுரி ராணிகள்" பற்றி முன்னமே நிதிமந்திரி சுப்பிரமணியம் கக்கிய விஷயம்தான் இப்போது கக்கன் வாய் மூலம் வருகிறது!

அன்பு எழிலன், திருநெல்வேலி.

(?) தமிழகத்து சரித்திரங்கள், மன்னர்களின் தாலங்கள்—இவையெல்லாம் முரண்பாடு கொண்டும், குழப்பம் நிறைந்தும் காணப்படுகின்றனவே ஏன்?



தமிழகத்து சரித்திரக் குறிப்புகள் காலத்தாலும், கயவர்களாலும் அழிக்கப்பட்டுவிட்டன. எஞ்சியுள்ளவற்றை வைத்து எல்லாத் தமிழ் அறிஞர்களும், புலவர் பெருமக்களும் ஒன்று கூடி, 'இன்னதுதான் தமிழக வரலாறு' என வரையறுத்து விடுவார்களேயானால் தாங்கள் குறிப்பிடும் குழப்பமும் முரண்பாடும் குறைய மார்க்கமேற்படும். ஆனால் நமது தமிழ் நாட்டுப் புலவர்களும் வரலாற்று மேதைகளும் தாங்கள் படித்தவற்றை—படித்ததில் பெற்ற பெருமையை, ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு "யார் மேதை?" என்கிற போராட்டத்தில் இறங்கி, ஒருவர் ஆராய்ச்சியை ஒருவர் மறுத்துக் கொண்டு, வீணேகாலத்தைக் கழிக்கிறார்கள். இதேபோலத்தான் சில ஆண்டுகளுக்கு முன் கோவையில் நடைபெற்ற முத்தமிழ் மாநாட்டில் நிறைவேற்ற வேண்டிய முடிவுகள் எவ்வளவோ இருக்க அதை யெல்லாம் விடுத்து, "இலக்கியம்" என்ற சொல் தமிழா; வடமொழியா?" என்றபோராட்டத்தில் எல்லாப் புலவர்களும் கச்சையை வரிந்து கட்டிக் குதித்தார்கள். பிறகு முடிவின்றிக் கலைந்தார்கள். ஆகவே மிச்சமுள்ள தமிழர் வரலாற்றை ஒரு நிலைப்படுத்தாது குழப்பம் செய்து கொண்டிருக்கும் பெருமை தமிழ்ப் புலவர்களுக்கே உரியதாகும். அவர்கள் பெருநோக்கோடு மன்றம் நிறுவி அனைவரும் ஒருமித்த கருத்தைத் தெரிவிக்க முன்வரும் நாளே நன்னாள்!

எம். தருமலிங்கம், காஞ்சீபுரம்.

(?) "தமிழ்நாடு போராட்டத்தில் அறிஞர்கள் குதிக்கிறார்களாம்" என்று பக்தவத்சலம் கிண்டல் செய்திருக்கிறாரே; அதுபற்றி உமது கருத்தென்ன?

வேறென்ன; தமிழ்நாடு போராட்டத்தில் அறிஞர்கள் தான் குதிப்பார்கள்! பக்தவத்சலங்களா குதிப்பார்கள்?


## விற்பனையாகிறது!

'முரசொலி'யில் தொடர்கதையாகப் படித்தீர்கள்—

இப்போது திரை ஓவியமாகப் புத்தகத்தில் படியுங்கள்!

# : புதையல் :

திரைக் கதை வசனப் புத்தகம்

விலை 8 அணா : : கழிவு 40 சத வீதம்

[தேவையான பிரதிகளுக்கு கழிவு நீக்கி முன்பணம் அனுப்பவும். அல்லது வி. பி. யில் அனுப்ப வேண்டுமென்றாலும் தெரிவிக்கவும்.]

எம். கே. பதிப்பகம்,

த. பெ. 712, : : சென்னை—6.


ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4-128, மவுண்ட்ரோடு, சென்னை—6, தமிழ்நாடு